# மண்

இதழ் 176

பங்குனி / சித்திரை
March / April
2016

1990 - 2016





அமரர் - கலாநிதி
கந்தையா குணராசா
(செங்கையாழியான்)



அமரர்.கலாபூசணம்
பி.எம்.புன்னியாமீன்
(கல்விச்சுடர்)


எங்கள் உறவுகளை
எங்களோடு கூடி
வாழ விடு !
சிறைக்கதவுகளைத்
திற! எங்கள் உறவுகள்
தங்கள் சொந்த ஊர்களுக்கு
போகட்டும் !!!
கூடி வாழட்டும் !!!
வேண்டாம்


கண்ணீர் அஞ்சலி

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி



முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de


வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# எங்கள் கருத்து...

தற்கொடை செய்த போராளிகள் தற்கொலை செய்யும் அவலம்!- யார் பொறுப்பு தமிழினத்தின் விடுதலைக்காய் தம் வாழ்வை இழந்து இன்று தங்களின் வாழ்வாதாரத்தை நடத்தமுடியாது தற்கொலை செய்து கொள்ளும் அவலம் தொடர்ச்சியாக நடந்துகொண்டே இருக்கின்றது. இதை விடப் பெரிய அவலம் தமிழ் சமூகத்திற்கு இனி வேறெதும் வந்துவிடப்போவதில்லை.எத்தனையோ தடவைகள் ஊடகங்கள் ஊடாகவும் முகநூல்கள் ஊடாகவும் முன்னாள் போராளிகளின் அவலங்களை காட்சிப்படுத்தியும் அதுகுறித்து தமிழ் சமூகம் கண்டுகொண்டதாக இல்லை

குறிப்பாக புலம்பெயர் சமூகம் கண்டுகொண்டதாக இல்லை. யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கைச் சேர்ந்த முன்னாள் போராளி ஒருவர் தொழில் வாய்ப்பு இன்மை காரணமாக தற்கொலை செய்துள்ளார். யோதிலிங்கம் துசன் என்ற 34 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே தற்கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவரது மனைவியும் முன்னாள் போராளியே! இவர்களின் தற்கொலைகளுக்கு யார் பொறுப்பு? என்றால் இவர்களின் தற்கொடைகளுக்கு பொறுப்பாக இருந்தவர்களே இவர்களின் தற்கொலைகளுக்கும் பொறுப்பேற்க வேண்டும். புலம்பெயர் தேசத்தில் இருந்துகொண்டு கோடி கோடியாய் செலவு செய்து நிகழ்வுகள், விழாக்கள் கூட்டங்கள் நடாத்துபவர்களே புலம்பெயர் தேசத்தில் பணத்தை வைத்துக்கொண்டு வயிறு வளர்ப்பவர்களே நீங்கள் அனைவருமே இவர்களின் தற்கொலைகளுக்கு பொறுப்பானவர்கள்.

போராளிகளின் தியாகத்தால் வாழ்ந்துகொண்டிருப்பவர்களே, ஒரு கணம் சிந்தியுங்கள். தமிழ் இனத்தின் விடுதலைக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்களின் குடும்பங்களுக்காக நீங்கள் செய்தது என்ன? புலம்பெயர் தேசத்தில் நீங்கள் எதற்காகவோ எல்லாம் ஒன்று கூடி பேசிய நீங்கள் இந்த முன்னாள் போராளிகளின் வாழ்வாதார திட்டங்களுக்காக ஒருதடவையாவது ஒன்று கூடி பேசியுள்ளீர்களா? ஆறு வருடங்களாக தங்களின் துன்பங்களையெல்லாம் அடக்கி வைத்துக்கொண்டிருக்கும் இந்த தியாகிகளின் வாழ்வாதாரத்திற்காக ஏதாவது செயற்திட்டங்களை உருவாக்கியுள்ளீர்களா? அறிந்தவகையில் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்திற்காக தாயகதேசத்திலோ அல்லது புலம்பெயர்


தேசங்களிலோ எவரும் ஒன்று கூடி ஒரு வேலைத்திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தியதாக தெரியவில்லை. மூச்சுக்கு முன்நூறு தடவைகள் கோசம்போடும் தலைவர்களே இந்தப்போராளிகள் எங்கிருந்துவந்தவர்கள் இப்போது எங்கு இருக்கிறார்கள் என்று ஒருமுறையாவது சிந்தித்துள்ளீர்களா? தமிழினம் மரணிக்ககூடாது என்பதற்காக இரவு பகலாக பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் தியாகங்கள் புரிந்தவர்கள் இன்று ஒரு பிடி உணவுக்கு வழியின்றி தற்கொலை செய்கின்ற அவலம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்றால். இனி இந்தத் தமிழ்ச் சாதியை யார் காப்பாற்ற முடியும் பாவித்துவிட்டு தூக்கியெறியும் குணம் கொண்ட தமிழினமே நீ விடுதலைபெற தகுதியான இனமா? என்பதை ஒருதடவை ஆய்வு செய்துபார்.

தமிழர் விடுதலைக்கா உழைத்தவர்கள் பிச்சை எடுக்கையில், விடுதலைக்காக உழைத்தவர்கள் விபச்சாரம் செய்கையில், அவர்களைப்பற்றி சிந்திக்கத் தவறிய உனது விடுதலைக் கோசம் எந்தவகையில் நியாயமானது. ஒரு விடுதலைப்போராளி தனது குருதியை சிந்தி விடுதலைபெறலாம். ஆனால் ஒரு விடுதலைப்போராளி விபச்சாரம் செய்து விடுதலைபெறலாமா? இன்று தமிழின விடுதலை விபச்சாரமாக மாற்றப்பட்டுள்ளது. இது தமிழினத்தின் சாபக்கேடு. பிணங்களுக்கு பின்னர் உங்கள் பணங்களை கொண்டுவந்து என்ன செய்யப்போகின்றீர்கள்.

இறந்தவனுக்கு பணம் வழங்கும் பண்பாட்டில் வளர்ந்த இனம் எம் தமிழினம் அல்லவா? ஒருவன் இறந்தால் ஒன்பதுபேர் வருவார்கள் உதவுவதற்கு அவன் உயிருடன் இருக்கும்போது ஒருவர் கூட திரும்பிப்பார்ப்பதில்லை. மீண்டும் ஒரு முறை சிந்தியுங்கள். இனியொரு முன்னாள் போராளியின் தற்கொலை எம்தேசத்தில் இடம்பெறக்கூடாது. மரணங்களுக்கு மாலையிடுவதை நிறுத்திவிட்டு மரணங்களை தடுப்பதற்கு முயற்சிசெய்வோம். வரலாறு எல்லாவற்றையும் பதிவு செய்துகொண்டிருக்கின்றது என்பதை நினைவில் வைத்துக்கொண்டு. தியாகத்திற்குப் பின்னால் இருக்கின்ற சொத்துக்களை சுருட்ட நினைப்பவர்களே நாளை உங்கள் பிள்ளைகளையும் வரலாறு தண்டிக்கும் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு, இன்று தமிழர்களுக்கு தேவையற்றவர்களாகிப்போன முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்திற்காக உதவ முன்வாருங்கள் இருப்பவர்களையாவது காப்பாற்ற முயற்சிசெய்யுங்கள்.....

ஆசிரியர்

# ஆத்திசூடி விளக்கம்!...




## சித்திரம்பேசேல்:-

உன் பேச்சுத் திறமையைப் பிறரிடம் காட்ட ஆசை உனக்கு. அதற்காக இல்லாதவர்களை உண்மை போல கற்பனைசெய்து அழகாகக் கூறுகிறாய். அதைக் கேட்பவர்களும் அது உண்மையோ என்று மயங்கி வியக்கிறார்கள். சித்திர விசித்திரமாகப் பேசி அவர்களை ஏமாற்றியதற்காக நீ மகிழ்ச்சியடையலாம். அது உண்மையான நிலையான மகிழ்சியா?.. இல்லை நீ பேசியது பொய். கற்பனை என்று அவர்களுக்குத் தெரியும்வரைதான் உன் மகிழ்ச்சி நிலைக்கும். நீ ஏமாற்றுக்காரான் என்பதை அறிந்தால் பிறகு நீ உண்மையே பேசினாலும் அதைப் பொய் என்றேதான் அவர்கள் நினைப்பார்கள். ஆகவே பொய்யை மெய் போல அழகு செய்து பேசாதே என்கிறார் அவ்வைப்பாட்டி. (சித்திரம்- பொய்யை மெய் போலக்கூறும் வார்த்தைகள்)

## சீர்மை மறவேல்:-

புலவர்களுக்கு அள்ளி வழங்கிய வள்ளல் குமணன். ஆனால் அவன் தம்பியோ கெட்டவன். தானே அரசனாக விரும்பினான். அண்ணன் இதை அறிந்து தம்பியிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டு கானகம் சென்று மறைந்து வாழ்ந்தான். ஆனாலும் அண்ணன்மீது சந்தேகப்பட்ட தம்பி, அவர் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு ஆயிரம் பொன் தருவதாக அறிவித்தான். ஒரு புலவர் குமணனைக் காட்டில் கண்டு ஒரு பாடலைப் பாடினார். அவருக்குப் பரிசு தரத் தன்னிடம் பொருள் இல்லையே என்று வருந்திய குமணன், தன் தலையைக் கொண்டுபோய் தம்பியிடம் கொடுத்துப் பரிசு வேண்டுமாறு கூறினார். ஆனால் புலவரோ "கொடையாளிகளில் நீ தலை சிறந்தவன்" என்று போற்றிப் பாடிவிட்டுப்போனார். இப்படிப்பட்ட பண்பை - சீர்மையை நீ மறக்காதே என்கிறார் அவ்வைப்பாட்டி..

# ஏமாற்றம்!...

முயல் ஒன்று தன் பசியைப் போக்கவே தோட்டம் ஒன்றினுள் புகுந்து கரட்கிழங்கு ஒன்றைப் பிடுங்கிவந்தது. அதை நரி ஒன்று கண்டுகொண்டது. முயலிடமுள்ள கரட்கிழங்கைத் தந்திரமாகப் பறித்து உண்ண ஆசைப்பட்டது. முயலுக்குக்கிட்டப்போய் முயலாரே...முயலாரே.. உமக்குக் கண் இல்லையா?..அழுகிய கரட்கிழங்கையல்லவா பிடுங்கி வந்திருக்கிறீர் என்றது. நரியின் சொல்லைக்கேட்ட முயல் அந்தக்கிழங்கைக் கீழே போட்டது. அதை நரி எடுத்துச் சாப்பிடப்போனது.

இவ்விடயத்தை மரத்திலிருந்து அவதானித்துக் கொண்டிருந்த காக்கையார் உடனே பறந்துவந்து அந்த கரட்கிழங்கைத் தூக்கிச் சென்றது. முயலை ஏமாற்றிய நரி வெட்கத்துடன் பெரிதும் ஏமாற்றப்பட்டுவிட்டேனே என்று எண்ணி அவ்விடத்தைவிட்டு ஓடியது. ஆகவே இக்கதைமூலம் பிறரை ஏமாற்ற நினைப்பவர் தாமே ஏமாறுவார் என்ற பாடத்தை நமக்குப் புகட்டுகின்றது.

செல்வி.ஸ்ரீ.சுகன்யா
ரூத் மிஷன் - கிளிநொச்சி

## சர்வதேசக் குறியீடுகளும் விளக்கங்களும்...

01.வெண்புறா - அமைதி, சமாதானம்
02.ஒலிவ்மரத்தின் இலை - சமாதானம்
03.மஞ்சள்கொடி - தொற்றுநோய்
04.கறுப்புக்கொடி - எதிர்ப்பு,சோகம்,மரணம்
05.அரைக்கம்பத்தில் கொடி - உலகத்தொழிலாளர் அமைப்பு
06.சிவப்பு விளக்கு - மருத்துவமனை, ஆபத்து
07.செஞ்சிலுவை - மருத்துவ உதவி
08.கண்கள் கட்டப்பட்டு கையில் தராசு வைத்திருக்கும் பெண் - நீதி
09.உடைந்த கைவிலங்குடன் இரு கைகள் - விடுதலை
10.சுட்டுவிரலும் நடுவிரலும் சேர்ந்த அடையாளம் - வெற்றி
11.தலைகீழானகொடி - துன்பம்
12.தீப்பந்தம் - ஒலிம்பிக்

செல்வி வி.திர்ஷா
ரூத் மிஷன் - கிளிநொச்சி

# செல்வம் என்பது சிந்தையின் நிறைவே...

இலங்கையின் பெரிய ஆறு மகாவலி கங்கையாகும். அதன் அருகே ஒரு குடிசையில் வாழ்ந்து வந்த வீரன் குடும்பத்தவர்கள் மிகவும் ஏழ்மையானவர்கள் அவர்கள் அங்கு நெல் பயிரிட்டு அதிலிருந்து அரிசியை எடுத்து மா அரைத்து விற்பனை செய்துவந்தனர். வீரன் நற்குணமும் நற்செயல் புரியும் குணம்கொண்டவனாவன். ஒரு நாள் அவன் வேலை செய்யும்போது"நான் ஒருவரோடும் பொறாமை கொள்ளேன்..என்மீது யாரும் பொறாமை கொள்ளாார்" எனக்குக் கடன் தொல்லை இல்லை. கவலை இல்லை, நோய் இல்லை. என் மனைவியோடும் பிள்ளைகளோடும் ஒற்றுமையாக வாழ்வேன். என்று சொல்லி இன்பமாகப் பாடினான்.

அதனைக்கேட்ட அரசன் அவன் அருகில் வந்து "இலங்கை அரசனாகிய நான் உன்மேல் பொறாமை கொள்கிறேன். உன்னைப்போல மகிழ்ச்சியும் ஆறுதலும் எனக்கில்லை" நீ கவலை ஏதும் இல்லாமல் இன்பமாக இருக்கும் இரகசியத்தை எனக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டான். வீரனும் அந்த உண்மையை எடுத்துரைத்தான். மன்னனும் "சிந்தையின் நிறைவே குறையாத செல்வம்" என்பதை அறிந்து அவனைப் பாராட்டிச் சென்றான். இக்கதைப் பாடல் நவாலியூர் சோமசுந்தரப் புலவரால் இயற்றப்பட்டதாகும்.

செல்வி.ஜே.சனுஜா
ரூத் மிஷன் - கிளிநொச்சி

நன்றிகள்!..

மண் சஞ்சிகையின் அட்டைப்பட கணனி வடிவமைப்பு
செல்வன் பானுஸ்கந்தா-புவனேந்திரன்
Duisburg
மண் சஞ்சிகையின் கணனி வடிவமைப்பு
செல்வன் சிவகாந்த்-சிவராசா
Duisburg

# எல்லாம் அவன் செயல்...

ஆம் அது கடற்கரையை அண்டிய கிராமம். அங்குள்ள அனைவரும் மீன்பிடித்தொழில் செய்துவந்தனர். அங்கே கடவுள் பக்தி நிறைந்த ஒருவர் இருந்தார். அவர் எந்நேரமும் கடவுளைத் தரிசித்தே வந்தார். ஒரு நாள் மாலை நேரம் ஒருவர் ஓடோடி வந்தார்.

ஐயா..ஐயா.. இன்னும் சிறிது நேரத்தில் கடல் பொங்கி இப்பகுதியை சூழவுள்ளதாம் அனைவருமே மேட்டுப் பகுதிக்குத் தப்பிச் செல்கிறார்கள் நீங்களும் வாருங்கள் தப்பிச் செல்லலாம்" என்றார். ஆனால் அவரோ "எல்லாம் அவன் செயல் என்னைக் கடவுள் காப்பாற்றுவார் நான் வரவில்லை" என்றார். சிறிது நேரத்தில் அப்பகுதியில் வெள்ளம் பெருகியது. இதனால் அனைவரும் தப்பிச் சென்றனர். அந்தப் பக்தர் மட்டும் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தார். அப்போது ஒரு சிறிய படகை ஓட்டிக்கொண்டு ஒருவர் வந்தார். "ஐயா வாருங்கள் தப்பிச் செல்வோம் படகில் சீக்கிரம் ஏறுங்கள்" என்றார். ஆனால் அந்தப் பக்தர்" எல்லாம் அவன் செயல் என்னைக் கடவுள் காப்பாற்றுவார் என மறுத்துவிட்டார்

சிறிது நேரத்தில் மேலும் வெள்ளம் பெருகியது. இவர் வீட்டுக்கடவாயில் ஏறி நின்றார். அவ்வேளையில் ஒரு சிறிய விமானம் பறந்து வந்தது. விமானப் பாதுகாவலர் விமான ஏணியை இறக்கி "ஏறி வாருங்கள் தப்பலாம்" என்றார். அதற்கு அவர் "எல்லாம் அவன் செயல் என்னைக் காக்கக் கடவுள் இருக்கின்றார்" என்று மறுத்துவிட்டார். வெள்ளம் மேலும் பெருகி அவர் வெள்ளத்தில் சிக்குண்டு இறந்துவிட்டார்.

இதன்பின்பு ஒருநாள் பரலோகத்தில் கடவுள் எல்லோரையும் நலம்காண வந்தார். அப்போது அந்தப் பக்தர் இறைவனை வணங்கி "உங்களை அனுதினமும் தரிசித்தேன் இதுவா எனது முடிவு என்றார். "அப்பனே உனக்கு மூன்று சந்தர்ப்பங்கள் வழங்கினேன். முதலில் செய்தி அனுப்பினேன். பின்னர் படகை அனுப்பினேன். இறுதியில் விமானத்தை அனுப்பினேன் நீ ஒன்றையும் பயன்படுத்தவில்லை. நீ மட்டும்தான் என் பக்தனா?..எத்தனைகோடி பக்தர்கள் உள்ளனர். அவர்கள் எல்லோருக்கும் நான் அருள் பாலிக்க வேண்டுமல்லவா!.. உனது பிடிவாதத்திற்கு இதுவே முடிவு. "நீ இருப்பதைவிட இறத்தலே மேல்" எனக்கூறி விடைபெற்றார் கடவுள்.

செல்வி.கிருபாஜினி கிருபாகரன்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

# தகவல் களஞ்சியம்..

**உயிரினங்கள்:-**

01- கங்காருதான் அதிகதூரம் தாண்டும் மிருகமாகும். அது ஒரே தாவுதலில் சுமார் 13 மீட்டர் நீளத்தைத் தாண்டிவிடும்.
02- தேனீக்கு இரண்டு இரைப்பைகள் உண்டு. ஒன்று சேமிப்பு அறையாகவும் மற்றையது ஜீரண உறுப்பாகவும் செயற்படுகின்றன.
03- மண்புழுக்களில் ஆண் - பெண் என்ற தனித்தன்மை கிடையாது.
04- ஆமைக்குப் பற்கள் கிடையாது. நூறாண்டுகளுக்கு மேல் வாழக்கூடியது ஆமை மட்டும்தான்.
05- முதலையின் அடிவயிற்றுத் தோலில் இருந்துதான் குண்டு துளைக்காத உடைகள் தயாரிக்கப் படுகின்றன.

**நாடுகள்:-**

01- இரண்டு தேசியகீதங்களைக்கொண்ட நாடு - அவுஸ்திரேலியா
02- சிங்கப்பூரில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் கடலுக்குள் கண்ணாடி மாளிகை அமைக்கப்பட்டுள்ளது.
03- உலகிலேயே மிக நீளமான தாழ்வாரம் உள்ள இடம் இந்தியாவிலுள்ள இராமேஸ்வரம். இது நாலாயிரம் அடி நீளமுள்ளது.
04- இங்கிலாந்தில் முதன் முதல் ஜெட் விமானம் பறக்கவிடப்பட்டது 1941ம் ஆண்டாகும்
05- வாத்தை தேசிய பறவையாகக்கொண்ட இரு நாடுகள் கனடா, ஜாவா.

**பொது:-**

01- இரவு வேளைகளிலும் ஒட்சிசனை வெளிப்படுத்தும் தாவரம் துளசிச் செடியும் அரசமரமுமாகும்.
02- சட்டைவஸ் என்ற தாவரத்தின் பூவில் உலர்ந்த சூல் முடிகளே குங்குமப்பூவாகும்
03- பாலில் இல்லாத சத்து இரும்புச்சத்தாகும்.
04- டியூப் லைற் சுமார் ஆறு ஆயிரம் மணிநேரம்வரை எரியும் திறன்கொண்டது.
05- சுமார் 93 நாடுகளில் ஒரே நேரத்தில் விற்பனையாகி புத்தக உலகில் சாதனை படைத்த "கெரி பொட்டர்" புத்தகத்தை எழுதியவர் இங்கிலாந்தின் பெண் எழுத்தாளரான ஜே.கே.ரோலிங் என்பவராவர்.

செல்வி.கிருபாஜினி கிருபாகரன்
செல்வி.நிவேதா ஜதீஸ்குமார்
ரூத் மிஷன் - கிளிநொச்சி

# சிந்தனைத்துளிகள்..

01- பிறரை விமர்சிக்க முன்னர் உன்னைப்பற்றி நினை.
02- கல்வியில் செருக்கடைதல் முதன்மையான அறியாமை.
03- தன்னை அறிவது அறிவு. தன்னை மறப்பது மடமை.
04- ஒவ்வொரு மனிதனும் தாம் படும் துயரத்திற்கு தானே பொறுப்பாளி.
05- வாழ்க்கையின் வேகத்தைக்கண்டு முறிந்து போய்விடாதீர்கள். பிரச்சனைக்கு வளைந்து கொடுத்து முன்னேறுங்கள்.
06- எவன் ஒருவன் புகழை வெறுக்கிறானோ அவனுக்கு உண்மையான புகழ் தானாக வந்தடையும்.
07- நன்மையான வாழ்க்கையும் இன்பமான மரணமும் உண்மையான அருளாகும்.
08- தனது ஆற்றலை உணர்ந்தவன் தன்னுடைய துன்பத்தை இழந்தவன் ஆவான்.
09- இதுவரை நீ என்ன செய்திருக்கிறாய் என்பதை வைத்தே உலகம் உன்னை எடைபோடுகின்றது.
10- தெளிந்த உண்மையும் கருத்துத்தூய்மையும் மனிதனுக்கு வெற்றியைத்தரும்
11- அனைத்தையும் பொறுப்பவளாக இருக்கும் பூமாதேவியைப்போன்று நீங்களும் பொறுமையுடன் இருந்தால் உலகம் உங்கள் காலடியில் அமரும்.
12- துன்பப்படுபவர்களுக்கு உதவிகள் செய்வதன்மூலம் தெய்வீக இயல்பு நம்மிடம் வெளிப்படும்.

செல்வி.ஸ்ரீ.சுகன்யா
ரூத் மிஷன் - கிளிநொச்சி

## பழமொழிகள்

01- அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
02- உண்மை சொல்லிக் கெட்டார் இல்லை.
03- தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்.
04- காகம் திட்டி மாடு சாகாது.
05- ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு.
06- வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
07- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
08- குற்றம் பார்க்கின் சுற்றமில்லை.

செல்வி ச சர்மியா
அருளகம் - வவுனியா

## எத்தனை!...

செல்வி. கு.சர்மிளா
(அருளகம் - வவுனியா)

இம் மண்ணுக்காய் - தம்
உயிர்களைத் துறந்த
உத்தமர்கள் - தான்
எத்தனை...

அவர்களை ஈன்றெடுத்த
தாய்மாரின்
கனவுகள் - தான்
எத்தனை...

ஓடி..ஓடி உழைத்து
ஓடாய்ப்போன
உள்ளங்கள் - தான்
எத்தனை...

பள்ளிப் பருவத்தில்
பாடுபட்டுப் படிக்கும்
மாணவர்கள் - தான்
எத்தனை...

உடமையிழந்து உணவிழந்து
உறங்கமால் தவிக்கும் - எம்
உறவுகள் - தான்
எத்தனை...

மாணவர்கள்கூட - இன்று
காமுகர்களால் அழியும்
கொடுமைகள் - தான்
எத்தனை....

தமிழராய் பிறந்ததனால்
உலகில்படும்
துயரங்கள் - தான்
எத்தனை...

## அருளகம்!...

ஆண்டது இரண்டாயிரத்தொன்று
ஆனது அருளகம் ஒன்று
ஆணுடன் பெண்ணும்
ஆதரவு இல்லம் அது...

ஆலயத்துணை அருகிருக்கும்
ஆண்டுகள் பல கடந்திடவே
அற்புதம் நிறைந்திடவே
அறங்காவலர் ஐயாக்கள்
அம்மாக்கள் அக்காக்கள்
அண்ணா தம்பி என்று
அப்படி ஒரு குடும்பம்...

அறத்துடன் கல்வி
அன்புடன் ஒழுக்கம்
அறிவியல் சமூக அரசியல்
அனைத்தும் அரவணைத்து
அள்ளித்தரும்-எங்கள்
அருளகம் பெரிதே
அருளகம் வாழ்க
அன்பால் உயர்க....

செல்வன்.த.தஜேந்
( அருளகம் - வவுனியா)

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 2

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 2 | 6 | | 7 | 4 | | 5 |
| 5 | | 8 | | | 4 | 2 | | |
| | 3 | | 9 | | 5 | | 7 | 8 |
| | 1 | 9 | | 4 | 3 | 5 | | |
| 7 | 2 | | 5 | 6 | | | 1 | 3 |
| | | 3 | 2 | 1 | | 9 | 4 | |
| | 8 | 1 | | | 6 | 7 | | 4 |
| 9 | | 7 | 4 | 5 | | | 8 | 2 |
| 3 | | 5 | 8 | 7 | 2 | | 9 | 1 |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 91

## (பங்குனி - சித்திரை 2015)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01-04 இது நெருங்கும்போது மாணவர்கள் அதிகமாகப் படிப்பார்கள்

13-16 மாணவர்கள் இது போட்டுச் செயற்பட்டால் அதிக பலன் பெறுவார்கள்

வ – இ:

08-06 சூரியன் மறையும் திசை

11-10 நிலத்தின் உயரமான பகுதி

கீ – மே:


08-04 வீட்டுத்தளபாடம் ஒன்று

13-09 ஒரு பக்கத்தைக் குறிக்கும் வழிகாட்டுவது

மே – கீ:

01-09 நிறம் ஒன்று

08-16 ஒலி எழுப்பும் கருவி ஒன்று (விடைகள் இன்னொரு பக்கத்தில்)


முத்துக்குமார சுவாமி ஆலயம்
MÜLHEIM MUTHUKUMARASAMY ALAYAM
சமயப் போட்டிகள்
காலம் 03.07.2016
நேரம் - 10.00

# வினாக்களும் விடைகளும்

தொகுப்பு.திருமதி.ஜெயா நடேசன்-ஜேர்மனி

## இலங்கை பற்றிய பௌதிக புவியியல் தகவல்கள்:-

01. இலங்கையின் பரப்பளவு -65.610 சதுர கி.மீ (25.332 சதுர மைல்)
02. இலங்கையின் நீளம் 432 கி.மீ (270 மைல்) அகலம்224 கி.மீ(140 மைல்)
03. இலங்கையின் நீளமான நதி மகாவலிகங்கை 333 கி.மீ
04. இலங்கையின் உயரமான மலை பேதுருதாலகாலமலை 2524 மீ
05. யாழ்ப்பாணத்தில் ஓடும் ஆற்றின் பெயர் வழுக்கை ஆறு.
06. இலங்கையில் இயற்கையான துறைமுகம் அமைந்துள்ள இடம் திருகோணமலை
07. இலங்கையில் வெந்நீர் ஊற்றுக்கள் அமைந்துள்ள இடம் திருகோணமலை - கன்னியா
08. இலங்கையின் தேசிய மரம் நாகமரம்
09. இலங்கையின் நிலப்பரப்பில் பெரிய மாகாணம் அநுராதபுரம். சிறிய மாகாணம் கொழும்பு
10. இலங்கையன் பெரிய தாவரவியல் பூங்கா அமைந்துள்ள இடம் பேராதனை
11. இலங்கையின் உயரமான அணைக்கட்டு விக்டோரியா அணைக்கட்டு
12. இலங்கையின் சுவரோவியங்களில் புகழ்பெற்றது சிகிரியா ஓவியங்கள்
13. இலங்கையின் அதி உயர் நீர்வீழ்ச்சி பம்பரகந்த நீர்வீழ்ச்சி 240 மீட்டர்
14. இலங்கையில் காணப்படும் கனிப்பொருட்கள் சுண்ணாம்புக்கல், இரத்தினக்கல், இல்மனைட், காரீயம்
15. இலங்கையிலுள்ள இயற்கை வனம் சிங்கராஜா வனம்
16. இலங்கையில் அதிக மழை பொழியும் இடம் வட்டவளை (நுவரெலியா)
17. இலங்கையில் குறைந்த மழை பொழியும் இடம் மறிச்சுக்கட்டி (மன்னார்)
18. இலங்கையையும்இந்தியாவையும் இணைக்கும் நீரிணை பாக்குநீரிணை
19. இலங்கையில் அதிகுளிரான இடம் கந்தப்பளை
20. இலங்கையில் கண்ணைக்கவரும்நீர்வீழ்ச்சிகள் தியலுமை, துன்கிந்தை
21. இலங்கையில் அஜந்தா குகைகளின் தொகை 29
22. இலங்கை தலைமன்னாருக்கும் இந்திய தனுஸ்கோடிக்கும் இடையிலுள்ள வரலாற்றுச் சின்னம் இராமர் அணை
23. இலங்கையில் ஒரு குடாநாடு யாழ்ப்பாணம்

## 1209 சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளனர்!

இலங்கையில் 16 வயதுக்கும் குறைவான வயதுள்ள ஆயிரத்து 209 பெண் பிள்ளைகள் கடந்த வருடம் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் பெரும்பாலானவர்கள் விரும்பிய பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

மேலும் 292 பெண் பிள்ளைகள் பலவந்தமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையங்களுக்கு கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விபரங்களை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

பாலியல் தொடர்பான போதிய அறிவு இல்லாததே இதற்கு காரணம் எனவும் இணையத்தளங்கள் போன்ற நவீன தொழில்நுட்பங்களும் இந்த நிலைமைக்கு காரணமாக அமைந்துள்ளன எனவும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

## உலகில் பெண்களின் தற்கொலை வீதம் இலங்கைக்கு மூன்றாம் இடம்...

உலகில் பெண்களின் தற்கொலை வீதம் அதிகரித்து செல்வதாகவும் அதில் இலங்கைக்கு மூன்றாம் இடத்தில் உள்ளதாக ஐக்கிய இராச்சியத்தின் அரச மருத்துவ சபையின் விசேட நிபுணர் அசங்க விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து காதலர் தினத்தை அடுத்து இந்த சதவீதம் மிகதுரிதமாக அதிகரிப்பதாக தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் நாளொன்றுக்கு பெண்களில் தற்கொலை வீதம் 4 தொடக்கம் 5 ஆகவும்,உலக அளவில் பெண்களின் தற்கொலை வீதத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை மூன்றாவது இடத்தை பெறுகின்றது.

குறிப்பாக இலங்கையில் கொழும்பு, களுத்துறை, நீர்கொழும்பு, கண்டி ஆகிய மாவட்டங்களிலேயே இந்த நிலைமை மிக அதிகமாக இருப்பதாக ஐக்கிய இராச்சியத்தின் அரச மருத்துவ சபையின் விசேட நிபுணர் அசங்க விஜேரட்ன குறிப்பிட்டுள்ளார்.

### 2015 ஆம் ஆண்டு எமது நாட்டில்

இடம்பெற்ற 1854 பெண்கள் துகஷ்பிரயோகங்களில் 1501 சம்பவங்களில் பாதிக்கப்பட்டோர் 16 வயதுக்கு உட்பட்ட சிறுமிகள் என ஓர் அறிக்கை கூறுகிறது. யாழ்ப்பாணத்தில்மட்டும் நாளொன்றுக்கு 3 அல்லது 4 முறைப்பாடுகள் கிடைப்பதாக அறிய முடிகிறது

# சுடோக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 2

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 6 | 8 | 7 | 4 | 3 | 5 |
| 5 | 7 | 8 | 1 | 3 | 4 | 2 | 6 | 9 |
| 4 | 3 | 6 | 9 | 2 | 5 | 1 | 7 | 8 |
| 8 | 1 | 9 | 7 | 4 | 3 | 5 | 2 | 6 |
| 7 | 2 | 4 | 5 | 6 | 9 | 8 | 1 | 3 |
| 6 | 5 | 3 | 2 | 1 | 8 | 9 | 4 | 7 |
| 2 | 8 | 1 | 3 | 9 | 6 | 7 | 5 | 4 |
| 9 | 6 | 7 | 4 | 5 | 1 | 3 | 8 | 2 |
| 3 | 4 | 5 | 8 | 7 | 2 | 6 | 9 | 1 |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி முடிவு - 91

| | | | |
|---|---|---|---|
| ப | ரி | ட் | சை |
| ச் | கு | ற் | மே |
| சை | லை | ம | ள |
| தி | ட் | ட | ம் |

# குறுக்கெழுத்துப் போட்டி முடிவு - 151

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | க | ளி | ர் | தி | ன | ம் |
| ன் | ண | ரு | வ | ன | ம் | ர |
| ணா | வி | ஆ | ஞு | ம் | ட | க |
| ர் | க | நா | ள் | ட | ப | ச |
| ல | ன் | ன் | வ | ட் | ட | ம் |
| வ | ட் | டி | ரு | ப | கு | ணை |
| பா | று | ம | தீ | த் | ரு | ப |

# குறளும் பொருளும்

தீவினையச்சம்: –

201. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு.

202. தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

203. அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

205. இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.

206. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

207. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்றடும்.

208. தீறவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வியா தடியுறைந் தற்று.

209. தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

210. அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்.

# குறளும் பொருளும் (பாவங்களைச் செய்தற்கு அஞ்சுதல்)

201. மற்றவர்களுக்குக் கொடுமை செய்வதற்குக் கொடியவர்கள் அஞ்சமாட்டார்கள். மேலானவர்கள் அஞ்சுவார்கள்.

202. முன்னால் துன்பந்தரும் தீத்தொழில். பின்னால் துன்பந்தருவதால் தொட்டவரை மட்டும் சுடும் தீயை விடக் கொடுஞ்செயல் செய்ய அஞ்ச வேண்டும்.

203. தமக்குத் தீமை செய்யும் பகைவருக்கும் தாம் தீமை செய்யாதிருப்பதை அறிவினுள் முதன்மையானதென்பர் அறிஞர்.

204. மறதியினாலும் மற்றவர்களுக்குக் கேடு தரும் செயலை நினைக்கக்கூடாது. நினைப்பவனை அறக்கடவுள் கெடுத்துவிடும்.

205. தான் ஏழை என்று கருதி அவ்வேழ்மை நீக்கப் பிறருக்குக் கெடுதல் செய்யக்கூடாது. செய்தால் மேலும் ஏழையாவான்.

206. தனக்குத் துன்பம் வந்து வருத்துவதை வேண்டாதவன் பிறருக்குத் துன்பந்தரும் கெடுதலைச் செய்யக்கூடாது.


207. எவ்வளவு பாரிய பகைமையில் இருந்தும் தப்பிக்கலாம். ஆனால் தீவினை ஆகிய பகை மட்டும் நீங்காது நின்று கொல்லும்.

208. ஒருவரின் நிழல் அவரை விட்டு நீங்காதிருப்பது போன்று பிறருக்குக் கெடுதல் செய்தவரிடம் அக்கேடு நீங்காது அவரிடம் தங்கும்.

209. தன் நன்மையைத் தான் விரும்புபவன் மற்றவருக்குச் சிறிய அளவு கெடுதல் செய்வதையும் விட்டுவிட வேண்டும்.

210. ஒருவன் தீய வழிகளில் நடந்தாலும் பிறருக்குத் தீமை செய்யாது இருப்பானே ஆனால் அவனைத் துன்பம் பற்றாது என்பதை அறிக.

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



**வீறு:-**

யானையைப் போர்க்களங்களுக்கு அழைத்துப் போகிறார்கள். களியாட்டங்களில் பழக்கி, வீரவிளையாட்டுக்கள் காட்டுகிறார்கள். ஊர்வலங்களில் கொண்டுவருகிறார்கள். யானை இல்லாத விழாக்களே இல்லை என்று ஒரு குருவி மற்றக்குருவியைப் பார்த்துச் சொன்னது. இரண்டாவது குருவி வியப்போடு கேட்டது. "யானைக்கு எப்படி இத்தனை ஆற்றல்கள்" முதல் குருவி சொன்னது...

"வீறுடையான் நூறுடையான்"

**தோழமை:-**

கிழிசல் துணிகளைத் தைக்கும் வேலையில் விரல்கள். சுட்டுவிரல் அடுத்த விரலைப் பார்த்து "துன்பப்படுகிறவர்களுக்குத் துன்பப்படுகிறவர்களே துணை" என்றது. அடுத்த விரல் கேட்டது. ஏன் அப்படிச் சொல்கிறாய்!..." இதோ பாரேன்" சுட்டு விரல் சொன்னது..

"கிழிசல் துணிக்கு ஓட்டை ஊசி"

**விதைகள்:-**

வெயிலில் நெடுந்தூரம் பறந்து வந்த நாடோடிப் பறவைகள் முகில்களின் இடையே நுழைந்தபோது குளிரில் நனைந்து களித்தன. கொஞ்சநேரத்தில் மழைத் துளிகளாக முகில்கூட்டம் கீழே விழத் தொடங்கின. ஐயோ!..நல்ல முகில்கள் விழுகின்றனவே....என்று இரங்கி அழுதது ஒரு பறவை. வழி காட்டிப் பறவையோ"எல்லாம் நன்மைக்கே" என்றது."குளங்கள் நிரம்பும் நாம் மீன் பிடிக்கலாம் மரங்கள் தளைக்கும் நாம் கூடு கட்டலாம்" அது சொன்னது.

'நல்லவர்கள் எழுந்தாலும் நன்மைக்கே விழுந்தாலும் நன்மைக்கே"



## கல்விக்காக உயிரைப் பயணம் வைத்து பயணம் செய்யும் மாணவர்கள்

நேபாள் நாட்டில் பள்ளிக்கு செல்வதற்காக மிகுந்த ஆபத்தான முறையில் ஆற்றை கடக்கும் சிறுவர்களில் நிலை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையில் அமைந்துள்ள மலை பிரதேசம் தான் நேபாளம்.

சுற்றுலாவுக்கு பெயர் பெற்ற இந்நாட்டில் கல்விக்காக உயிரை பணயம் வைத்து மாணவர்கள் பயணம் செய்வது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நேபாளத்தின் பெனிகட் மாநிலத்தில் உள்ள திரிஷ்சுலி நதியின் அருகே அமைந்துள்ளது தயாங் கிராமம்.

சாலை வசதிகள் இல்லாத இந்தக் கிராமத்தை சேர்ந்த மக்கள் வெளியிடங்களுக்குச் செல்லவேண்டுமென்றால் திரிஷ்சுலி நதியின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள இரும்புக் கம்பியை பிடித்தபடி தான் செல்லவேண்டும்.பெரியவர்கள் மட்டுமில்லாது ஏராளமான மாணவர்களும் தங்களின் கல்விக்காக இத்தகைய ஆபத்தான பயணத்தை தினமும் மேற்கொள்கின்றனர்.

நதியை கடப்பதற்காக இதைபோன்று பல்வேறு இடங்களிலும் இரும்பு க்கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சில இடங்களில் பெட்டிகளை தாங்கும் வசதியுடன் கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் கடந்த 2010ஆம் ஆண்டு இவ்வாறு ஆபத்தான முறையில் நதியை கடக்க முயன்று 5 நபர்கள் இறந்துள்ளனர்



இதை போன்று ஏராளமான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.எனவே, காலால் நடந்து செல்லும் வகையில் மரப்பாலம் அமைத்து தரவேண்டும் என்று கிராம மக்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றனர்.

சமீபத்தில், இது போன்ற ஆபத்தாக பயணங்களை தவிர்ப்பதற்காக நதிகளின் குறுக்கே 366 பாலங்கள் அமைப்படும் என்று அந்நாட்டு பிரதமர் தெரிவித்திருந்தார்.எனினும் இதுவரை அத்திட்டம் நிறைவேற்றப்படாததால் தயாங் கிராம மக்கள் இந்த ஆபத்தான பயணங்களையே தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## வெற்றி

நம்மை தாழ்த்தும்போது
கொதித்து எழு...
நம்மைப் புகழும்போது
அடக்கமாய் இரு!....

## சிறியது

சிறிய தவறுகளை
மறந்துவிடு...
சிறிய உதவிகளை
மறந்துவிடாதே!....

# முக்கிய சில நிகழ்வுகள்.... (பங்குனி மாதம்)

## இலங்கை

21.03.1984-முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மணலாறு தமிழ்ப் பிரதேசத்திலுள்ள தமிழர்கள் விரட்டப்பட்டு சிங்களக்குடியேற்றம் நிறுவப்பட்டது.

22.03.1965-எஸ்.ஜே.வி செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் ஐக்கிய தேசியக் கட்சி (டட்லி சேனநாயக்கா) அரசமைத்தது.

24.03.1965-டட்லி - செல்வா உடன்படிக்கை எழுதப்பட்ட நாள்.

26.3.1984-தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ முதலாவது இதழான "விடுதலைப் புலிகள்" பத்திரிகை வெளிவந்தது.

உலகம்:-

08.03.00-சர்வதேச பெண்கள் தினம்.

11.03.1949- (NATO) வடஅத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளின் அமைப்பு உருவாக்கப்பட்டது.

13.03.1957-ஐரோப்பிய ஒன்றியம் உருவாகிய நாள்.

22.03.00-உலக நீர்த் தினம்.

24.03. பிரித்தானிய அரசி 2ம் எலிசபெத் மகாராணி முடிசூடிய நாள்

25.03.00-பெரிய வெள்ளி தினம்

27.03.00-உயிர்த்த ஞாயிறு தினம்

## கண்டுபிடிப்புகள்:-

02.03.1783-பிரஞ்சுக்காரரான மொண்ட் கொப்வியர் என்பவரால் பறக்கும் பலூான் கண்டுபிடிக்கப்பட்டது

04.03.1885-இங்கிலாந்து நாட்டவரான ஸ்டேரி என்பவர் இரு சக்கர வண்டியை வடிவமைத்தார்.

17.03.1969-முதன் முதல் ஒலி ஒளிப்பதிவு நாடாவை Sony நிறுவனம் உலகிற்கு அறிமுகப்படுத்தியது. (Video Cassette)

18.03.1851-முதன் முதல் உலகளாவிய கண்காட்சி இங்கிலாந்தில் நடாத்தப்பட்டது. சுமார் 6 மில்லியன் மக்கள் கலந்துகொண்டனர்.

20.03.1895-ஜேர்மனி நாட்டவரான டீசல் என்பவரால் டீசல் மோட்டார் வாகனம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

23.03.1963-முதன் முதல் ஒலிப்பதிவு செய்யக்கூடிய ஒலிப்பதிவுக் கருவியை பிலிப்ஸ் நிறுவனம் உலகிற்கு அறிமுகப்படுத்தியது (Audio Cassette)
29.03.1953-எவெரெஸ்ட் மலைச்சிகரத்தை முதன் முதல்த்தொட்டு மனிதனால் சாதனை படைக்கப்பட்ட நாள்
31.03.1972-RCA என்ற அமெரிக்க நிறுவனம் கொம்பட் டிஸ்க் (Compact Dice) உலகிற்கு அறிமுகப்படுத்தியது.

## உலகப் பிரபலங்களில் சிலர்:-

01.03.1910-தென்னிந்திய சினிமாப் பாடகர் தியாகராஜ பகவதர் பிறந்ததினம்.
02.03.2005-பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் நினைவுதினம்.
03.03.1959-சோவியத் அதிபர் ஜோசப் ஸ்டாலின் நினைவு தினம் (1879 - 1959)
04.03.1519-உலகப்பிரசித்திபெற்ற ஓவியர் இத்தாலி நாட்டவரான லியனார்டோ டாவின்சி நினைவுநாள்.
07.03.1965-பிரித்தானியா பிரதமர் வின்சன் சேர்ச்சில் நினைவுதினம் (1874 - 1965)
07.03.1990-கவியோகி சுத்தானந்த பாரதியார் நினைவுதினம் (11.05.189 - 07.03.1990)
09.03. -பாக்கிஸ்த்தானை உருவாக்கிய சிற்பி முகமட் அலி ஜின்னா நினைவுநாள்.
14.03.1883-சோஸலிச சித்தாந்தத்தை உருவாக்கிய கம்யூனிசத் தந்தை ஜேர்மனியர் கார்ல் மாக்ஸ் நினைவுநாள் (1818 -1883)
18.03.1886-சிறி இராமகிஷ்ணபரமகம்ஷா நினைவுநாள் (1836 - 1886)
22.03.1845-எக்ஸ்ரே கதிர் இயக்கத்தைக் கண்டுபிடித்த ஜேர்மனியரான வில்லியம்ஸ் றொன்ற்கெஸ் பிறந்ததினம் (22.03.1845 - 10.02.1923)
23.03.1931-இந்திய சுதந்திரப் போராட்ட வீரன் பகவத்சிங் நினைவுநாள் (28.10.1907 - 23.03.1931)

# சித்திரை மாதம்

## இலங்கை..

05.04.1981-குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் ஆகியோர் இலங்கைப் படையினரால் கைதுசெய்யப்பட்டநாள்.
07.04.1978-பொலிஸ் அதிகாரி பஸ்தியாம்பிள்ளை குழுவினர் வவுனியா - முருங்கன் காட்டுப் பகுதியில் கொல்லப்பட்ட நாள்.
10.04.1985-தமிழினவிடுதலைப் போராட்ட வரலாற்றில் ஐந்து விடுதலை இயக்கங்கள் ஒன்றுகூடி திம்பு பேச்சுவார்த்தை ஆரம்பித்த நாள்
18.04.1958-பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்ட நாள்.

19.04.1995-சந்திரிகா அரசு - விடுதலைப்புலிகள் போர் நிறுத்தம் முடிவுற்ற நாள்.
19.04.1988-உண்ணாநோன்பு இருந்து உயிரிழந்த முதல் தமிழ்ப்பெண்மணி அன்னைபூபதி அம்மையார் நினைவுநாள். (03.11.1932 -19.04.1988)
22.04.2000-சுமார் 240 வருடங்களின் பின்பு ஆனையிறவு இராணுவதடைமுகாம் விடுதலைப்புலிகளால் வெற்றிகொள்ளப்பட்ட நாள்.

## உலகம்:-

01.01.00-உலக முட்டாள் தினம் (ஏப்ரல்பூல்)
07.04 உலக சுகாதார தினம்.
14.04.2016-உலகத் தமிழ் - சிங்கள புதுவருடம்.
20.04.1421-சீனாவின் தலைநகரமாக பீக்கிங் நகர் பிரகடனப்படுத்தப்பட்டது.

## கண்டுபிடிப்புக்கள்:-

06.04.1908-அமெரிக்கரான கொராம் ஸ்டீவன் என்பவரால் முதன் முதல் சைலன்ஸ் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது.
08.04.1800-இத்தாலி நாட்டவரான வோல்டர் என்பவரால் முதன் முதல் மின்கலம் பற்றி (Electric Battery) கண்டுபிடிக்கப்பட்டது.
15.04.1776-பிரித்தானியக் கடலோடியான ஜேம்ஸ் குக் என்பவர் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் குட்டித் தீவுகள் கண்டறியப்பட்டது.
27.04.1904-இங்கிலாந்து நாட்டவரான ஜேம்ஸ் வாட் என்பவரால் நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது.

## உலகப்பிரபலங்களில் சிலர்:-

04.04.1968-அமெரிக்க கறுப்பின மக்களுக்காகப் போராடிய மாட்டின் லூதர்கிங் நினைவுநாள் (15.01.1929 - 04.04.1968)
04.04.1865-உலகப்புகழ் பெற்ற அமெரிக்காவின் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் நினைவுநாள்.
12.04.1945-உலகப்புகழ் பெற்ற அமெரிக்காவின் ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட் நினைவுநாள். (1882 -1945)
13.04.1970-உலகப்புகழ் பெற்ற பிரான்ஸ் ஜனாதிபதி சார்ள்ஸ் து கோல் நினைவுநாள் (1890 - 1970)

15.04.1847-மின்குமிழைக் கண்டுபிடித்தவரான தோமஸ் அல்வா எடிசன் பிறந்தநாள் (15.04.1847 - 18.10.1931)

19.04.1882-பரிணாமவியல் விஞ்ஞானி சாள்ஸ் டாவின் நினைவுநாள் (1809 - 19.04.1882)

21.04.1964-பாவேந்தர் பாரதிதாசன் நினைவுநாள் (29.04.1891 - 21.04.1964)

21.04.1926-பிரித்தானிய மகாராணி 2ம் எலிசபெத் பிறந்தநாள்.

22.04.1904-அணுக்குண்டின் தந்தை ரோபேட் ஒப்பின் கெய்மர் பிறந்ததினம் (22.04.1904 - 18.02.1967)

23.04.1566-இங்கிலாந்து நாட்டவரான உலகப்புகழ் நாடகமேதையான சேக்ஸ்பியர் பிறந்ததினம் (23.04.1566 - 00.04.1616)

24.04.1820-தமிழ் வளர்த்தவர் ஐரோப்பியரான ஜி.யூ.போப் பிறந்ததினம். (1820 -1908)

26.04.1971-ஈழத்தந்தை ஈழக்காந்தி தந்தை செல்வநாயகம் நினைவுதினம் (31.03.1898 - 26.04.1971)

27.04.1521-உலகப்புகழ் கடலோடி மகேலன் நினைவுதினம் (1480 - 1521)


29.04.1843-முதல் இலங்கை ஆயர் வின்ஸ்சன் பெரேரா நினைவுதினம் (1770 - 1843)

30.04.1945-ஜேர்மனிய சர்வாதிகாரி அடோல்ப்கிட்லர் நினைவுதினம் (1882 -1945)

## காற்று மாசடைதலின் விளைவுகள்

உலகம் முழுவதும் காற்று மாசால் ஆண்டொன்றுக்கு சுமார் 55 இலட்சம்பேர் உயிரிழந்து வருவதாக சர்வதேச ஆய்வொன்று தெரிவித்துள்ளது. குறிப்பாக இந்த உயிரிழப்பானது இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் 55 சதவீதமாகக் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, காற்று மாசினால் ஆண்டுதோறும் 55 சதவீதமானவர்கள் இறக்கின்றார்கள் எனவும் இதனால் இப்போதே உலக நாடுகள் அனைத்தும் விழித்துக்கொள்ளவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், உலக நாடுகள் இதனைக் கருத்திலெடுக்காவிட்டால் இதன் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்லும் எனவும் தெரிவித்துள்ளது.கடந்த 2015 இல் இந்தியாவில் 14 இலட்சம் பேரும் சீனாவில் 16 இலட்சம் பேரும் காற்று மாசு காரணமாக உயிரிழந்திருப்பதாக அந்த ஆய்வு முடிவுகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச மகளிர் தினம்!...



இத்தினத்தையொட்டி
பல ஆக்கங்கள்
இம்மலரில்
இடம்பெற்றுள்ளன...

உலக சனத்தொகையில்
பெரும்பான்மையினராக உள்ள
பெண்ணினம் இன்று உலகின் பல
பாகங்களிலும் ஒடுக்குமுறைகளுக்கு
உள்ளாக்கப்பட்டு வருகின்றது.
இதிலிருந்து விடுபட உலகளாவிய
ரீதியில் ஆண் - பெண் சமூகத்தினர்
மனோநிலையில் மாற்றங்களை
ஏற்படுத்த பல அமைப்புக்கள்
செயற்படுவதோடு
இத்தினத்தில்அதற்கான
பலசெயற்பாடுகளும்
முன்னெடுக்கப்படுகின்றன....

## சுதந்திரம்..

திருமதி.நகுலா சிவநாதன்
ஜேர்மனி

மெல்ல கருவறையை எட்டிப்பார்க்கிறேன்
கணக்கற்ற உயிர்களின் ஜனனம் அங்கு
காலச்சுவடுகள் பதிந்த அந்த கருவறை
சுதந்திரம் கண்டதும் இந்த நாளா?
சுட்டிப்பெண்ணாக வளர்ந்த பருவம்
எட்டிக்காலடி வைத்து எழில் கோலம் வரைய
கட்டியணைத்து முத்தம் கொடுத்த தாயவளை
பட்டி தொட்டியெல்லாம் தேடிப்பார்க்கிறேன்!
பாவையவள் என் மனதுக்கோலத்தில் எழிலுருவம்
பூவையாய் நான் பிறந்திட்டதால் சுதந்திரம்
சுதந்திரம் வந்ததனால் சுகமான பிரசவமா?
நிரந்தரம் இதுவென அப்போ நினைக்காத மனம்
பிறப்பு ஒவ்வொன்றும் சுதந்திரம்
நெருக்காதவரை அது நிரந்தரம்
காத்திரமான பிறப்பிலே தான்
சாத்தியம் மனிதவாழ்வு மலர்ந்திடும்!...

# பெண்ணும் மலரும்!...

கவி மீனா - ஜேர்மனி

பூவொன்று மொட்டவிழ்ந்து
மணம் கமிழ விரிகின்ற போதிலே
தேன் சிந்தி பல வர்ணம் கொண்டு
கண்ணை பறிக்கும் வேளையில்
வண்டுகள் ரீங்காரம் போட்டு
சுற்றிச் சுற்றி
தேனை உறிஞ்சிக் குடிக்கையில்
தென்றல் வந்து உரசி மெல்ல
அதன்வாசத்தைகொண்டு
செல்கையில் மலரின்
சம்மதம் இன்றியே அதை
பறித்துமனிதரும்
முகர்ந்து நிற்கையில்
மௌனமாய் கண்ணீர் சிந்தும்
மலர்களின் மனம் அழுகுதையா
சூரியனின் பிரிவாலே மலர்
வாடி இதழ் சோருதையா
பூவையர் மனமும் மலர் போலே
வாடுவது யாருக்கும் தெரிவதில்லை
பெண்ணின் அழகை ரசிப்பவனோ
அவளைபூவையர் என்று
சொல்கையில்
விழியின் எழிலை ரசிப்பவனே
அவளைகொண்டை
மீனாய்பாடுகையில்
முகத்தின் ஜோதியை கண்டவனோ
நிலவாய் அவளைப் பார்க்கையில்
பல்லின் அழகை பார்த்தவனோ
வெண்முத்துக்கு
உவமை சொல்கையில்
நடை அழகை ரசித்தவனோ
அன்னமாய் அவளை புகழ்கையில்
கூந்தலின் அழகில் மயங்கியவன்
கரு மேகத்தை அங்கே காண்கையில்
குரலின் ஓசையில் இழைந்தவனோ
குயிலாய் அவளை மதிக்கையில்
ஆடல் அழகை கண்டவனோ
மயிலாய் அவளைப் பார்க்கையில்
அவள் அன்பு மனதை புரிந்து கொள்ள
யாரும் புவிக்கு வரவில்லை
மனதின் அழகை பாடிய கவிஞனோ
இன்னும் உலகில் பிறக்கவில்லை
சில வேளை கயவனின் கையில்
அகப்பட்ட பெண்ணின் நிலையும்
குரங்கின் கையில் அகப்பட்ட
அழகிய பூ மாலையின் கதியும்
காலடியில் சிதறி மிதிபட்டு
கதறி அழுது கலைந்து
போக நேர்கையில்
பெண்மையைப் புரியா மனிதர்களால்
பெண் மனம் உடைந்து போகுதையா
அவள் மனமும் மௌனமாய்
அழுது வடியுதையா
சொர்கத்தைச் சேர எண்ணும்
பெண்ணும் மலரும்பேசுமா?
தன் துயரம் எது என்று கூறுமா!...

## உன்னால்முடியும் பெண்ணே!...

(ஜெ.கிளாடிஸ்
ரூத் மிஷன் - கிளிநொச்சி)

போராடு பெண்ணே போராடு
உன் உரிமைக்காய் போராடு
சாதனையாளர் சரித்திரத்தை
புரட்டிப்பார் பெண்ணே
சாதனைப் பெண்களை
ஒருதடவை நினைத்துப்பார்
சிறிய வட்டத்தை விட்டு
வெளியே வா பெண்ணே
பரந்த உலகில் - உன்
பாதச் சுவடுகளை
பதித்து நடந்து வா!..
அடுக்களை உந்தன்
இருப்பிடம் அல்ல
அடிமை வாழ்வு உந்தன்
விதியுமல்ல வழியுமல்ல
உன்னால் முடியும்
பெண்ணே உன்னால் முடியும்!..
உலகத்தின் சக்தி நீயே
தலை குனிந்து நடக்கச்
சொன்னவர்களை - நீ
தலை குனிய வைக்கப்
பாரதி கண்ட புதுமைப்
பெண்ணே வா எழுந்துவா!..
பௌர்ணமியாய் உலகுக்கு
ஒளி கொடுக்க வா
நீ நினைத்தால் முடியாதது
இவ்வுலகில் எதுவும் இல்லை
நீயின்றேல் இந்த உலகமில்லை
எதையும் செய்து முடிக்கும்
உறுதிகொள் பெண்ணே
எத்தர்களை எதிர்க்கும்
தைரியம்கொள் நிமிர்ந்துநில்
நெஞ்சை நிமிர்த்தி
நிமிர்ந்து நில்..நிமிர்ந்து நில்
நாளைய சரித்திரத்தில்
சாதனைப் பெண்ணாய்
உன் பெயரைப் பதித்துச்செல்!...


------------------

## மகளுக்கோர் மடல்...

(திருமதி. கீத்தா பரமானந்தன்)
(ஜேர்மனி)

மகளே ! சுதந்திரம்
என்பது சுந்தரமானது
சுகிப்பதும் மிதிப்பதும் நீயே !
ஆடையும் அணியும்
பாருக்குப் பொதுவே
ஆளுமை கொள்வதே
உயர்வு தேடலும் தெளிவும்
கொண்டால் நாடிடும் உலகம்
உன்னை வானிலும்
மண்ணிலும் சுழன்று
மங்கையர் வடிக்கிறார்காவியம்
நிறைத்தமுனைப்புக் கொள்
கண்ணே ! நீயும் முட்டுவாய்
சிகரம் விரைந்து தடைகள்
தருவது உலகமல்ல தயங்கும்
உனது மனமே படைக்கும்
திறமை உனக்குளுண்டு
பகைமை எதிர்த்து
நீயும் வென்று படிப்பாய் நீ
புதுப் பரணி பரவுமெங்கும்
வெற்றிச் சங்கின் ஒலி
ரசிப்பேன் நானும் அருகிருந்து!..

# அட்டைப்படக் கவிதை (மண் இதழ்-175)



எழவானின் செங்கதிராய் இவரின் எழத்துகளோமிளிரும்
எடுத்துக்கொண்டபொருள்தன்னில் இதயங்களேகுளிரும்
வழவாதநெறிமுறைகளாய்வரைபுகளில் மிகத்தெளிவும்
வற்றாதுதொடர்ந்திடும் வகைதனில் அநுபவமோஒளிரும்..!

உழதுகின்றமேழியாகஎழதுகோல் உணர்த்தும்காட்சி
உண்மையினைஎடுத்துரைக்கும்மனஉறுதியில் இவராட்சி
பழதுபட்டிடாதபண்பைப்பேணும் பக்குவமேஇவரின் மாட்சி
பண்பட்டபடைப்பாற்றல் இவரின்பாதைக்குஎன்றும் சாட்சி..!

தொழவார்கள் வினைதீர்த்திடுகின்றதெய்வத்திற்கேஒப்பாய்
தொண்டுசெய்யும் மருத்துவராய்தொடர்ந்தபணியில்சிறப்பாய்
நழவிடாதஉறுதியோடுநேயப்பணிகள் செய்திடும் சிப்பாய்
நற்றமிழின் பற்றினால் ஞானத்தைப்படைக்கிறார்தித்திப்பாய்..!

பொழதெல்லாம் கடமைசெய்யும்பொறுமையின் இலக்கு
போற்றுதற்கும் ஏற்றுதற்கும் பொருளாயானகலைவிளக்கு
எழதுவதேபணியென்றுஏற்றுக்கொண்டதில் விதிவிலக்கு
இவர்பேனாவால் இருள்விலக்கும் இலக்கியவானின் கிழக்கு..!

செழமையாய் ஞானத்தைஉயர்த்திச் செயற்படுத்தும் தினவு
செம்மையானநேர்காணல்களில் சீர்தூக்கும் உயிர்ப்புனைவு
தழவுகின்றதென்றலாய்த்தமிழ்ப்பற்றில் குடும்பமேஇணைவு
தந்தோமெம் வாழ்த்துக்களைதமிழால்மண்வாசகரின்இசைவு.!

அம்பலவன் புவனேந்திரன்

# கும்மியடிப்போமடிதோழி..!

அம்பலவன் புவனேந்திரன்.

கும்மியடிப்போமடி தோழி கூட்டமாய்க் கூடிக்கூடி
குவலயம் திறந்ததென்று குதூகலம் மெய்திடக்கூடி
தம்மில் குறைந்தவர் தகைமையில் தளர்ந்தவர்
தாயாய் தங்கையாய் தாரமாய் நினைத்தவர்
இம்மியும் நகராது இமைகளை மூடாதுவிழிதீட்டி
இன்றையமாந்தரின் இயல்பினைஎடுத்துரைத்து
கும்மியடிப்போமடிதோழி கூட்டமாய்க் கூடிக்கூடி -நம்
குற்றங்கள் களைந்திடகுறைகளைநிறைவாக்கி...
அம்மிஅரைத்தவள் அடுப்படியில் உழன்றவள்
அரைவேக்காடுஎன்றுஅணிகலனைப் பூட்டியவர்
தும்மினால் குற்றம் துலங்கினால் தப்பென்று
துடுக்கினைஅடக்கிதுயருறவைத்தவர்கள்
நம்மில் உள்ளதிறமையைநாவால்ப் புகழ்ந்திடவும்
நானிலத்தில் பெண்கள் நல்லுயர்வைமதித்திடவே
கும்மியடிப்போமடிதோழி கூட்டமாய்க் கூடிக்கூடி -வந்த
குழப்பங்கள் நீக்கிடும் கூர்மதிகொண்டவரென்று...
தும்பிபிடித்துவிளையாடி தூர்ந்தவாழ்வுமீண்டும்
துன்பங்கள் களைந்துதுளிர்த்ததுஉண்மையில்
தம்பியும் தங்கையும் தடைகளில்லாதபாதையில்
தானாய்ப் பயணித்துத் தம்மைஉயர்த்திநிற்கையில்
எம்பிநடைநடந்துஎடுத்தவற்றைச் சாதித்திட
ஏற்றதருணங்கள் எமைநாடி இன்றுவந்ததென்று
கும்மியடிப்போமடிதோழி கூட்டமாய்க் கூடிக்கூடி -அந்த
கூற்றுவன் வந்தாலும் குச்சியைகொடுத்துஆட்டிவைத்து..
தம்மிடைநாமெல்லாம் தாழ்ந்தவர் என்றவர்
தகைமைபெற்றின்றுதரணியில் மிளிர்வதால்
நம்மிடைப் பேதங்கள் நலிந்துகரைந்தின்று
நலன்கள் சூழ்ந்துநன்மைகள் விரிந்திந்தப் பாரில்
எம்மிடைபெண்கள் எழுச்சிபெற்றதால்தான்
இருள்விலகியேஒடியதென்று இசைத்துக் களிப்பாய்
கும்மியடிப்போமடிதோழி கூட்டமாய்க் கூடிக்கூடி -நம்
கூர்விழிதீட்டிடக் கூறியபாரதியையும் வாழ்த்தியே..

# கவித்துளிகள்...

கவிஞர் முகில்வாணன்-ஜேர்மனி

## சிசுக்கள்

தெருவில் வீசப்படுவது
குப்பை கூழங்களல்ல
பிறந்த பிஞ்சு
சிசுக்களும்தான்!...

## பாரதத்தில்

மாடுவேண்ட
முப்பதாயிரம் ரூபா
ஒருபெண்ணை வேண்ட
மூவாயிரம் ரூபா!...

## கொலை

ஆண் குழந்தையை
பெற்றெடுக்காததால்
கொலையுண்டாள்
ஆசை மனைவி!..

## இரை

ஈழத்துச் சிறுமிகள்
இரையாகின்றனர்
செந்தமிழரின்
மூத்த குடிகளால்!...

## கல்யாணச்சந்தையில்

இறைச்சிக்கு வெட்ட
இழுத்துப் போகும்
எருதுகள்போல்
கல்யாணச் சந்தையில்
தமிழ்ப் பெண்!...

## தேடல்

மனைவி என்ற பெயரில்
வேலைக்காரியைத்
தேடி அலையும்
ஆண்கள் இன்னும்!...

## ஆவி

ஆடவும் பாடவும்
அரங்கேற்றம் கண்ட
பல பெண்கள்
அடுப்பங்கரையில் ஆவியாக!..

## ருசி

சுவைப்பது ருசிப்பதும் ஆண்
சுமப்பதும் சுகம் இழப்பதும் பெண்
அடக்குவதும் ஆள்வதும் ஆண்
அடங்குவதும் அழிவதும் பெண்!...

## கருவில்

கருவில் சிசு
பெண் என்றதும்
கருவோடு அழியும்
பெண் இனம்!...

## சீதனம்

ஒரு பெண்ணை
சில வேளைகளில்
உயிரோடு கொழுத்திவிடும்
சீதனம் என்னும் சீர்வரிசை!...

# பெண்ணினம்!...

கவிஞர் முகில்வாணன்
ஜேர்மனி

நவீன உலகம்
நாகரிக உலகம்
புதுமை உலகம்
பொறியியல்
உலகம் என்று
போற்றப்படும் இந்த
இருபத்தி ஓராம்
நூற்றாண்டில்
காட்டுமிராண்டிக்
காலத்தில்
பெண்களைத்
துரத்தித் துரத்தி
வீழ்த்தி வதைத்து
பலாத்காரம் செய்து
வலிந்து
புணர்ந்ததுபோல்
இன்றும்
வீதிகளிலும்
வீடுகளிலும்
கல்விச்சாலைகளிலும்
அலுவலகங்களிலும்
கோவில்களிலும்
பிரயாணம் செய்யும்
வாகனங்களிலும்
போகமுடியாதவாறு
சிலர் பாலியல்
வன்கொடுமைப்
படுத்துகிறார்கள்

பெண்கள் சுதந்திரமாய்
தனித்தியங்க முடியாத
நிலைமைகளை
தோற்றுவித்திருக்கிறது
ஆணாதிக்கம்

ஆடவர்கள் பலர்
பெண்ணை
உடல்சார்ந்த
தேவைக்காகவே
படைக்கப்பட்டதாக
நினைக்கிறார்கள்
கவர்ச்சிப்பொருளாக
காமத்துக்குப்
பயன்படும்
கருவியாகவே
கருதுகிறார்கள்

நிலத்தில் பயிரை
விதைப்பதுபோல்
ஆண் தன் விந்தை
பயிர் செய்யப்
பயன்படுத்தும்
இடந்தான்
பெண் என்று
எண்ணுகிறார்கள்

அந்த மனித மனத்தை
சுமைகளைத் தூக்கும்
கழுதைகளாகவே
கருதுகிறார்கள்

ஆண்அதிகாரிகளின்கீழ்
பணியாற்றும்
பல பெண்கள்
நெருக்குதல்களுக்குள்
சிக்கி
அவதியுறுகிறார்கள்

இலங்கையில்
இருபத்தேழ
விழக்காடு பெண்
ஊடகவியலாளர்கள்
இம்சைகளுக்கு
ஆளாக்கப்படுவதாக
பெண்கள் தின
செய்தி கூறியது

இரண்டாயிரத்து
பதினைந்தில்
உலகம் முழுவதும்
நூறு கோடி பெண்களும்
சிறுமிகளும் பாலியல்
வன்கொடுமைகளுக்கு
ஆளாக்கப்பட்டனர்
ஐ நா சபையால்
வெளியிட்ட
அறிக்கை கூறுகின்றது

வழக்குகள்
பதியப்படாமல்
மானம் என்ற
மர்மப் போர்வைக்குள்
மறைக்கப்பட்டிருக்கும்
குற்றச் செயல்கள்
எத்தனை!...எத்தனை!...

# நோபல் பரிசு பெற்ற தாயும் மகளும்!...





பெண்ணுரிமை பற்றியும், பெண் கல்வி பற்றியும் பாரதியின் பாடலுக்கு ஏற்றாற்போல் உலகப்புகழ் பெற்ற நோபல் பரிசை இருமுறை பெற்றதுடன் தனது மகளையும் நோபல்பரிசு பெற வைத்துப் பெண்குலத்திற்கே பெருமை சேர்த்தவரென்றால் அது மேரி கியூரி அம்மையாரையே சாரும். இவர்தான் தீராப்பிணி தீர்க்கும் ரேடியத்தைக் கண்டுபிடித்தவராவர்.

இவர் அறிவிலும் ஆற்றலிலும் ஆணுக்கு நிகராகப் பெண்களும் சிறந்தோங்க முடியுமென்று இவ்வுலகிற்கு நிரூபித்த பெருமாட்டியாவர். உலகின் தன் கண்டுபிடிப்புக்களால் சரித்திரத்தில் தனி முத்திரை பதித்த பெரும்பாலான விஞ்ஞானிகளில் பலர் வறுமையில் வாழ்ந்தே சாதனைச் சிகரங்களாக மாறினர். அப்படிப்பட்ட வரிசையில் போற்றப்படுபவர்தான் இந்த அம்மையார்.

இளமையிலே வறுமையில் வாடிய குடும்பம் ஒன்றில் போலந்து நாட்டிலுள்ள வார்சோ நகரில் 1867 நவம்பர் மாதம் 7ம் தேதி பிறந்தார். இவரது தந்தை ஒரு விஞ்ஞான ஆசிரியராவர். மேரிகியூரினின் மற்றொரு பெயர் மோனியா ஸக்லோடோஸ்கா என்பதாகும். இவரின் தாயார் ஒரு இசை ஆர்வலராக இருந்தார். மேரி கியூரி அம்மையாரின் பத்தாவது வயதிலேயே தாயார் காலமாகிவிட்டார். போலந்து நாட்டை ரஷ்ஷிய நாடு ஆக்கிரமித்து இருந்தபோது போலந்து நாட்டு மக்கள் ரஷ்ஷியாவை எதிர்த்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அப்போது தந்தையாரின் ஆசிரியர் வேலை பறிபோனதுடன் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டவே இவரது குடும்பத்தவர்கள் பிரான்ஸ் நாட்டின் தலைநகரமான பாரிசில் குறியேறினர்.

மேரி தன் பாடசாலைப் படிப்பில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றதுடன் நடனத்திலும் சிறந்து விளங்கினார். வறுமை அவரை வாட்டி எடுத்த போதிலும் அவரது இலட்சியத்துக்கு எதிராக வறுமை எதுவும் செய்யமுடியவில்லை. தன் கல்வியைத் தொடரவேண்டுமானால் ஏதாவது தொழில் செய்தே ஆகவேண்டும் என்ற நிலை காணப்பட்டதால் பாரிசிலுள்ள ஒரு செல்வந்தர் வீட்டில் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் பணியில் ஈடுபட்டார். கிடைத்த வருமானத்தைக்கொண்டு எளிமையாகவே வாழ்ந்தார்.

வறுமையில் வாழ்ந்தாலும் படிப்பில் பெரும் செல்வந்தராகப் படித்தார். கணிதம், விஞ்ஞானம், இரசாயனம், பௌதிகம், வானியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கினார். இவரின் படிக்கும் ஆர்வம் மேலும்... மேலும் அதிகரித்தது. இவர் பிரெஞ்சு மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றமையால் பாரிசில் பல்கலைக்கழகப் படிப்பைத் தொடர்ந்ததுடன் பல்கலைக் கழக விஞ்ஞானிகளின் உரைகளைத் தவறாமல் கேட்கும் மேரிக்கு அவை அவரது ஆராய்ச்சிகளுக்குப் பெரிதும் உதவின. அப்போது ஸோர் பானில் விஞ்ஞானக் கழகத்தில் சேர்ந்து பயின்றபோது எஞ்சிய நேரங்களில் தொழிற்சாலை ஒன்றில் போத்தல் கழவி தன் வாழ்வை வறுமையிலேயே கழித்தார்.

இவர் தனது சகோதரர் ஷாக் என்பவரோடு சேர்ந்து விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுவந்த பியேர் கியூரியுடன் இணைந்து பல்வேறு சோதனைகளையும் செய்யும் வாய்ப்புக் கிட்டியது. அவர் மின்சாரம், காந்தம் பற்றிப் பல்வேறு ஆராய்ச்சிகளை நடாத்திக்கொண்டிருந்தார். ரேடியம் ஒளியால் பாதிப்படையும் எந்தப் பொருளையும் பாதிப்படையச் செய்துவிடும், ஒளி புகக்கூடிய எந்தப் பொருளை மூடிவைத்தாலும் ரேடியம் ஊடுருவிச் சென்று அப்பொருளைப் பாதிக்கும். மேலும் வாயு மண்டலத்தில் உள்ள வாயுக்களின் மூலக்கூறுகளையும் ரேடியம் அயனிகளாக மாற்றிவிடும். ரேடியம் மின்சாரத்தையும் சுமந்து செல்லும் தன்மை உள்ளதாக மாற்றிவிடுகின்றது. ரேடியம் அடங்கிய கூட்டுப் பொருட்களுடன் கலக்கும்போது ஒளிர்தல் என்னும் செயல் அங்கு நடைபெறும். ரேடியம் வெப்பத்தை இடைவிடாது வெளிப்படுத்தக்கூடியது.

ரேடியத்தைக் கண்டுபிடித்த மேரிகியூரியின் புகழ் உலகெல்லாம் பரவியது. 1903ம் ஆண்டு ஆங்கிலேய றோயல் கழகத்தினர் டேவி தங்கப்பதக்கத்தை வழங்கிக் கௌரவித்தது. அதே ஆண்டில் இயற்பியலுக்கான சர்வதேச நோபல் பரிசும் தம்பதிகள் இருவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்நிலையில் சிறிது காலத்தால் அவரது கணவர் விபத்து ஒன்றில் காலமானார். 1911ம் ஆண்டில்வேதியல் துறைக்கான சர்வதேச நோபல் பரிசினையும் பெற்று இருமுறை நோபல் பரிசைப் பெற்ற ஒரே ஒரு பெண்மணியென்ற புகழையும் ஈட்டிக்கொண்டார்.

ரேடியம் என்பது உடலின்மீது பட்டால் அது உயிரணுக்களைக் கொன்றுவிடும் தன்மையுடையதாகும். இதனால் பல ஆண்டுகளாக ரேடிய கதிர் இயக்க ஆராய்ச்சியில் ஈடுபட்ட மேரிகியூரி அம்மையாரின் உடலில் பாய்ந்து அதனால் நோய் ஏற்பட்டு 1934ம் ஆண்டு அம்மையார் இந்த மண்ணுலகைவிட்டு மறைந்தார்.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா... அம்மையார் மறைந்தாலும் அவரது வாரிசு விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இறுதியில் வெற்றியும் கண்டார். அம்மையார் கண்டுபிடித்த ரேடியத்தின் உதவியால் பிற்காலத்தில் புற்றுநோய் குணமடைந்தன. மேரி கியூரி அம்மையாரின் மகளான ஐரின் கியூரி செயற்கைக் கதிரியக்கம் உண்டாக்கும் முறையைக் கண்டுபிடித்ததற்காக அவருக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டது. தாய்க்கும் மகளுக்கும் நோபல் பரிசு கிடைத்த பெருமை உலகில் இவர்களைவிட வேறு எவருக்கும் கிட்டவில்லை. ஆனால் இவர்களின் கண்டுபிடிப்புக்களால் உலகம் சுகதேகியாக வாழ்ந்துகொண்டிருக்கிறது என்றும் கூறலாம். ஆகவே சாதனை புரிவதற்கு ஆண் - பெண் வேறுபாடுகள் கிடையாது. மனஉறுதியும் முயற்சியும் கடினஉழைப்பும் இருந்தால் யாரும் முன்னேறிவிடலாம் என்னும் உண்மையை நாமும் புரிந்து கொள்வோமாக...

------------------

## காற்று மாசடைதல்!...

உலகம் முழுவதும் காற்று மாசால் ஆண்டொன்றுக்கு சுமார் 55 இலட்சம்பேர் உயிரிழந்து வருவதாக சர்வதேச ஆய்வொன்று தெரிவித்துள்ளது.

குறிப்பாக இந்த உயிரிழப்பானது இந்தியா, சீனா ஆகிய நாடுகளில் 55 சதவீதமாகக் காணப்படுவதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, காற்று மாசினால் ஆண்டுதோறும் 55 சதவீதமானவர்கள் இறக்கின்றார்கள் எனவும் இதனால் இப்போதே உலக நாடுகள் அனைத்தும் விழித்துக்கொள்ளவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், உலக நாடுகள் இதனைக் கருத்திலெடுக்காவிட்டால் இதன் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்லும் எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த 2013 இல் இந்தியாவில் 14 இலட்சம் பேரும் சீனாவில் 16 இலட்சம் பேரும் காற்று மாசு காரணமாக உயிரிழந்திருப்பதாக அந்த ஆய்வு முடிவுகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்!..

ப.பசுபதிராசா - ஜேர்மனி

"உலகில் உள்ள எல்லா அடிமைகளுக்கும் விடிவு பிறந்தாலும் பெண் என்ற அடிமை எப்போதும் இருந்துகொண்டே இருப்பாள்" என்றார் கம்யூனிசத் தந்தை கார்ல் மார்க்ஸ். இவரின் வார்த்தைகள் வெறும் தத்துவம் மின்னும் நடைமுறைச் சாத்தியமற்ற கூற்றுக்கள் அல்ல. இன்று உலகம்வாழ் பெண்ணினச் சுரண்டல்கள் மீதான முரண்பாடுகள் குறித்த முற்போக்கு எண்ணங்களே இவ்வொடுக்குதலின் கிடுங்குப் பிடிக்குள் இலங்கைத் தமிழ்ப்பெண்களின் அழத்தங்கள் சமீபகால வரலாற்று நெருக்கடியில் இன்னும் பல நூற்றாண்டுகாலப் பின்னடைவை எதிர்நோக்கி இருக்கின்றது. காலா காலமாக பெண்கள் மீதான ஒடுக்குமுறை எப்போதும் போல் மேலோங்கி நிற்கும்போது போர்க்காலத் தோல்வியின் பிரதிபலிப்புக்கள் இலங்கைவாழ் அதிலும் பிரதானமாக வன்னிமாவட்டத்தைச் சேர்ந்த உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தின் கூட்டு உழைப்பாளிகளான தொழிலாளப் பெண்களையே பெரிதும் முடக்கி முரசொலிக்கின்றது.

இலங்கைத் தமிழ்ப்பெண்கள் தங்கள் அழத்தங்கள் மீதானதும் ஆக்கிரமிப்புக்கள் குறித்தும் தெளிவான திட்டங்களோடு தங்கள் போராட்டப் பங்களிப்பை கட்டமைப்பிற்குட்படுத்தாது தனிமனிதக் கிளர்ச்சிகளோடு இணைந்திருந்தும் வலதுசாரியப் போக்குமிக்க இயக்கங்களின் மாயைகளுக்குள் மயங்கி நின்றதும் ஆணாதிக்க சிந்தனை மாறாத மரபுசார் யுத்த நுணுக்கங்களை நம்பியதும் தம் வீழ்ச்சியைத் தாமே எழுதி முடிக்கும் வரலாற்றுக் காரியத்தை செய்துமுடித்தனர். இடதுசாரிய பெண்ணிலை குறித்த கண் நோக்குடன் பெண் ஒடுக்குமுறைக்கு எதிரான கூட்டு முயற்சி பற்றிய விழிப்புணர்வையும் தேடுதல்களையும் முன் எப்போதும் அதிகம் அறிந்திராத இலங்கைத் தமிழ்ப்பெண்கள் திடீரென எழுந்த ஆயுத ஆணாதிக்க கிளர்ச்சிக் குழுக்களிடம் மன்றாடி மனுப்போடும் யுத்திகளுக்குள் சிக்கி இன்று என்றும் எழுந்திருக்க முடியாதபடி இழிவை அடைந்தனர்.

இலங்கைத் தமிழர்களின் போராட்ட வரலாறுகளும் சரித்திர சம்பவங்களும் ஒன்றை எமக்கு நினைவுபடுத்துகின்றது. அது எப்படி எனில் எல்லோரும் சேர்ந்து வாழும் இயல்பு நிலைப் போராட்ட வழிகோலலில் ஒரு தனி மனிதனிடமே அதிகார அலகுகளை ஒப்படைத்துவிட்டு தாங்கள் வெறும் பார்வையாளர்களாக இருந்துவிட்டு அவன் நிலைமைகளை வசை

பாடுவதும் வாழ்த்துப் பாடுவதுமாகவேதான் இருக்கின்றது. ஒரு கதாநாயகனை உருவாக்குவதே இன்னும் இவர்களுக்கு என்றுமே தீராத தேடுதல்களின் தேட்டம். இது எப்போதுமே யாரோ ஒரு அணியாடனுக்குக் கீழ் இருந்துவந்த எசமானிய விசுவாசத்தின் ஏகபோக எச்சங்கள். ஒரு கொள்கையின்பால் எல்லோருக்குமான எதிர்காலம் நோக்கிய நுண்ணறிவுப் பார்வையும் சேவையையும் கொண்டிருந்த கொள்கையும் இல்லை கொடியும் இல்லை விடிவும் இல்லை என்பதே கசப்பானதோர் உண்மை.

இந்த நிலையில் மாற்றம் என்பது அடிப்படையில் அப்படியே கிடப்பில் கிடக்கின்றபோது பெண்களின் நிலை பிள்ளை பெற்றுக் கொடுக்கவும் பிள்ளைகளுக்கும் கணவருக்கும் குடும்பத்தாருக்கும் எதுவும் நேர்ந்துவிடாது கடவுளிடம் மண் சோறு உண்பதாக நோன்பு மனுப்போடும் மாயங்களில் சித்திரமாக வாழும் பெண்ணின் விடுதலை எத்தனை மகளிர்தின ஒன்றுசேர் புரட்சிக்கரங்களால் புலரப்போவது ஒன்றுமே இல்லை.

எம்மிடையே அன்றுதொட்டு இன்றுவரை இலக்கிய உணர்வாகவும் பண்பாட்டுப் பாரம்பரிய தளங்களாக நின்று நிலைப்பதிலும் நகமும் சதையுமாய் வாழ்ந்துவரும் இதிகாசங்கள், புராணங்கள், இன்னும் நாலாயிரம் தேவாரங்கள் திவ்விய பிரபந்தங்களும், திருக்குறள், ஐம்பெரும் காவியங்கள் என்பனவெல்லாம் எப்போதுமே ஆணாதிக்க சிந்தனைகளையே அப்படியே உருவாக்கி பெண்களை என்றுமே ஆண்களின் நேரடிச் சொத்தாக கட்டி இழுத்துவரும் அடிமைச் சங்கிலிகள் என்பது அசைக்கமுடியாத உண்மை. எமக்குமட்டுமல்ல உலகப்பெண்களின் ஒடுக்குதலில் பங்கேற்று அந்தந்த நாடுகளில் இருக்கும் இலக்கிய வடிவங்களின் பெரும்பாலும் இதே வேலைகளைத்தான் செய்கின்றன. அப்படி இருந்த பெண்களுக்கெதிரான அனைத்தையும் அழித்துப் புதியவழியில் பெண்களின் எழுச்சியை சமத்துவச் சகோதரத்தை பெண்விடுதலை மகிழ்ச்சியை புதிய தடத்தில் பொறித்த மார்க்ஸிச லெனினிச ரஷ்ஷியப்புரட்சியே பெண்களுக்கான விடிவின் மறுமலர்ச்சிக்கூடம்.

யாழ்ப்பாண மேட்டுக்குடியினரின் வெள்ளைக்காறசட்டை உத்தியோக மோகமும் சிங்கள இனவாத முன்னெடுப்புக்களும் முட்டிமோதிய மோதல் கூர்மைகளுக்குள் அடிப்படையே அழிக்கப்பட்டுக் கிடக்கும் உழைக்கும் பாட்டாளி வர்க்கம் தனது சகலவிதமான உரிமை நசுக்குதல்களையும் எதிர்கொண்டு சிதறிக்கிடக்கும் இந்நேரம் எம் போராட்டப் பாதைகளுக்குப் படர்கொம்பாக இருக்கக்கூடிய புலம்பெயர்ந்த தமிழ்மக்களின் பங்களிப்பும்

பார்வையும் இந்த அரசியல் வீழ்ச்சியின்போது ஆராயப்படவேண்டிய காரணக்காரியமே. யாழ்ப்பாணக் கல்வி எழுச்சிக்கு எதிரான சிங்கள அரசுகளின் தரப்படுத்தலை எதிர்கொள்ளவேண்டிய பெண்கள் புகலிடங்களுக்கு நகரவும் வடபகுதிப் பெண்களாலும் வர்க்கப்பார்வைக் கூர்மையாலும் எப்போதுமே தரம்தாழ்த்திப் பார்க்கப்பட்ட வன்னிமாவட்டம் பாட்டாளி இனப்பெண்கள். இவர்களுக்குப் போராட்டத்தைத் தூக்கிச்சுமக்கும் நிர்ப்பந்தமானது வரலாற்றுப் போராட்ட முரணாகும்.

ஏனெனில் வன்னி மாவட்டத்தின் பெரும்பான்மை பெண்ணினம் நாடுதழுவயரீதியில் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட பின்தள்ளப்பட்டவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். சிங்கள, முஸ்லீம் பெண்களுடன் சேர்ந்து தேசிய அரசின் ஏகாதிபத்தியக் கொடுமைகளுக்காகப் போராடவேண்டியது திசை மாறி வெறும் ஆயுதக் கவர்ச்சிகளிடம் சரணடைந்தது ஒருவகை மோசடியே.. இங்கே ஒரு வேடிக்கையான விபரீதம் என்னவெனில் தமிழினப் பெண்களிடையேயுள்ள குரோத விரோதப் போக்குகளையும் விதேசியப் பார்வையினையும்விடச் சிங்கள இஸ்லாமியப் பெண்களோடு இவர்கள் இணைந்து செயலாற்றக்கூடிய பிரதிஅனுகூலங்கள் எளிமையானவையே.

இப்படியான சுமுகமற்ற மனநிலை தொடர்கின்றபோது ஆயுதக் கிளர்ச்சிகளின் மாயைகளுக்குள் சிக்கிய உழைக்கும் பாட்டாளி வர்க்கப் பெண்கள் இவ்வாதப்போராட்ட எழுச்சி தமது சவக்குழி என்பதை அறியாது அதுவே தமது சகல அடக்குமுறை வடிவத்தையும் விடுதலை செய்யும் என நம்பினர். தவிர்க்க முடியாத ஒரு பெரும் நிலப்பரப்பின் நிர்வாக உள்வாங்கலும் சிறிது ஆயுதப்போராட்ட வெற்றியும் நீண்டதொலை நோக்கின்றிய அரசியலைப் பெண்களுக்கு இனம் காட்டத்தவறியதுடன் தனிமனித வழிபாடும் இன்றைய வீழ்ச்சியை ஒழித்து வைத்திருந்தது.

புலம்பெயர்ந்த பெண்களுக்கு அவர்களின் நகர்வு என்பது அவர்களே எதிர்பாராத சௌகரியங்களை அள்ளிவழங்கும் அமுதசுரபியாக புலம்பெயர் உலகம் பளிச்சிட்டது. ஓடியோடி உழைத்து அவர்தம் குடும்பங்களைச் சகல வழிகளிலும் அபிவிருத்திக்கான ஏணிப்படிகளில் ஏற்றிக்கொண்டே தாயக விடுதலையை முடுக்கிவிடும் புலம்பெயர் அமைப்புக்களுக்கு ஆண்களைவிடத் தங்கள் புனித சின்னமாகக் கருதும் தாலிகளையும் சங்கிலிகளையும் எண்ணக்கணக்கற்ற காசுகளையும் பணங்களையும் அள்ளிவழங்கிய பெண்கள் போராட்டத்திற்கு அளித்த ஆதரவும் போராட்டத்தை எப்பவும் ஆறாமல் வைத்திருப்பதன்மூலம் சுயநல

மோகத்தில் பொதுநல வீழ்ச்சிக்கு இவர்களும் வித்திட்டனர் என்பது தெரிந்து செய்தி ஒன்றே.

இவ்வாறு புகலிடத்தில் தமது வாழ்க்கை மேலோங்க மீண்டும் அதே தமிழ்ப்பூர்ஷிவா சிந்தனைகளில் உந்துதலின் பேரில் தாங்கள் வாழவும் வரவும் தரவும் ஊரிலுள்ள தங்கள் ஊர்க்குல தெய்வங்களையும் உற்றார் உறவுகள் யார் என அறிந்துகொண்டு மறைமுகமாகக் கைகோர்க்கும் ஆதர்சமுமே புகலிடவாழ் பெண்களின் நிலையில் முன்னேற்றம்கண்ட தொடுபுள்ளிகள். அதே சமயம் அங்குள்ள பெண்களை ஆயுதநேசன் ஒருவரின் ஆருள்த்தாக்கத்துக்குள் தள்ளிக் குழிபறித்ததும் உள்ளங்கை நெல்லிக்கனியே.

இப்படியான ஒட்டுமொத்தமானவீழ்ச்சிக்குத் தெரிந்தோ தெரியாமலோ உதவியளித்த பெண்கள் எழவதற்கான பங்களிப்பில் இணைவு என்னும் பூச்சியம். இன்று பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கை மிகவும் பரிதாபகரமானது. உதவிகளைச் செய்ய கரம் இணைக்கும் ஆண்களைக்கொண்ட அமைப்புக்கள் பெரிதும் யாழ்குடாநாட்டிற்கு அதிக கரம் நீட்டி தம் வள்ளல் தன்மையை வடிவமைத்துக் கொள்கின்றனர். பாதிக்கப்பட்ட பெண்களை அதிகமாகக்கொண்ட வன்னி மண் என்பது அரசுக்கும் போராளிகள் என்ற எரிச்சல் பார்வை புகலிடப் பெண்களுக்கும் மாற்றான்தாய் மனப்பாங்கு. எனவே இந்த வேறுபாட்டை விளங்கி மாறுபாட்டைத்தர பெண்களால் முடியும். ”ஆவதும் பெண்ணாலே..அழிவதும் பெண்ணாலே” என்பது உண்மையே இனி அழிவதை விடுத்து ஆவதற்கு இணைக்கும் கரம் இந்த இனிய நாளின் ஏக்கத்தை நிச்சயமாக நிமிர்த்தும் என்பது என் எண்ணமாகும்..

------------------

## அறிவித்தல்...

தமிழில் பேசி, உங்கள் சுகாதாரப் பிரச்சனைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளப் போகிறீர்களா. தமிழில் பேசி வைத்தியம் செய்யமுடியவில்லையே என்ற கவலை வேண்டாம். புதிதாக அறிமுகமாகியுள்ளார் எங்கள் தமிழ் டாக்டர்...தொடர்பு கொண்டு உங்கள் சுகநலங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்...முகவரி..

**ஜூலியட் வளன்.**
Dr.med. Juliet Valan
Fachärzin für Innere Medizin Palliativmedizin
Gemarkenstr-46
45147 Essen - Germany
Tel:- 0201-793001, Fax-0201-786644

# குறுக்கெழுத்துப் போட்டி -151
## (பங்குனி- சித்திரை - 2016)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ:-

01-07 உலகின் பெண்களுக்காகக் கொண்டாடப்படும் தினம்

11-13 இது அழிக்கப்படுவதால் உலகில் மழை குறைவடைகின்றது ஒத்தசொல்.

32-35 உருவம் ஒன்று.

36-38 சிலர் இது வேண்டிப்பிழைப்பு நடாத்தி பணக்காரர்களாகியுள்ளனர்.

43-46 பழம்பெரும் இந்திய தமிழ்ச்சினிமா நடிகை.

வ-இ:-

11-08 சூரியன் ஒத்த சொல்

17-16 மாதம் ஒன்று

21-19 இசைக்கருவி ஒன்று

24-22 இலங்கையின் ஆதிக்குடிகள் இவர்கள்.

32-30 இலங்கையில் தமிழரின் பெருநிலப்பகுதி.

49-46 துணி வகைகளில் ஒன்று.

கீ-மே:-

21-07 நலிவுற்றோருக்கு இதுகொடுக்கவேண்டும் என்று சொல்வார்கள்.

40-19 படித்துப் பெறுவது இது.

43-22 பல துறைகளில் வல்லவரை இப்படியும் அழைப்பார்கள்

46-04 வாழ்வியல் நூல்தந்த பெருந்தகை.

49-35 குணம் குப்பையிலே இது பந்தியிலே என்று நம்மவர்கள் கூறுவார்கள்.

மே-கீ:-

01-22 இலங்கையில் வறட்சியான மாவட்டம்

02-16 இது இல்லாவிடின் இன்றைய உலகம் இயங்காது.

05-09 நாள் ஒத்தசொல்.

21-35 நோய் ஒன்று.

27-41 போக்குவரத்துச் சாதனங்களில் ஒன்று.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

## கொலஸ்ட்ரால் பிரச்னையால் அவதியா? இதை தினமும் சாப்பிடுங்க.....

கருவேப்பிலை என்றதுமே நம் அனைவரது நினைவுக்கும் வருவது முடி நன்றாக வளரும் என்பதே.

உணவுகளில் தினமும் பயன்படுத்தினால், பலரும் அதை சாப்பிடாமல் தூக்கி எறியத்தான் செய்வோம்.ஆயுர்வேத மருத்துவத்தில் கூட கருவேப்பிலையை பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

இதில் 63 சதவிகித நீரும், 6.1 சதவிகித புரதமும், ஒரு விழுக்காடு கொழுப்பும், 4 விழுக்காடு தாதுப்புகளும், 6.4 சதவிகித நார்ச்சத்தும், 18.7 சதவிகித மாவுச்சத்தும் இருக்கின்றன.

சுண்ணாம்பு சத்து, மக்னீசியம், இரும்பு சத்து, தாமிர சத்து, கந்தக சத்து மற்றும் குளோரின், ஆக்ஸாலிக் ஆஸிட் போன்றவையும் கருவேப்பிலையில் உண்டு.இதனை பச்சையாகவோ அல்லது ஜூஸ் வடிவிலோ எடுத்துக் கொள்ளலாம்.

செரிமான பிரச்னைகளை தீர்க்கிறது கருவேப்பிலை. உணவுகள் செரிமானம் ஆகாமல் இருந்தால் கொழுப்புகள் படிந்து தொப்பை ஏற்படும். எனவே கருவேப்பிலையை தினமும் காலையில் சிறிதளவு உட்கொண்டு வந்தால் கொழுப்புகளை கரைப்பதுடன், உடலின் மெட்டாபாலிசத்தை அதிகரிக்கிறது. அதுமட்டுமின்றி உடலில் உள்ள நச்சுகளையும் வெளியேற்றுகிறது, எனவே உடல் எடை அதிகரிப்பதை தடுக்கிறது.

குறிப்பாக கெட்ட கொழுப்புகளை எரிக்கும் பொருள் அதிகம் உள்ளது. கொலஸ்ட்ரால் பிரச்னையால் அவதிப்படும் நபர்கள் இதை தினமும் காலையில் உட்கொண்டு வரலாம்.

இதில் இரும்பு மற்றும் போலிக் ஆசிட் அதிகம் நிறைந்துள்ளதால், உடலின் அனைத்து பாகங்களுக்கும் ஒக்சிஜன் கிடைக்க வழிவகை செய்கிறது. இதன் மூலம் உடலில் இரத்த அணுக்கள் குறைந்துவிடாமல் பாதுகாக்கிறது.

இதில் ஆன்டி பக்டீரியா மற்றும் ஆன்டி ஆக்ஸிடன்ட் நிறைந்துள்ளதால் சருமத்திற்கு பொலிவை கொடுக்கிறது, கருவேப்பிலையை பேஸ்ட் செய்து, இதனுடன் மஞ்சள் சேர்த்து பருக்கள் இருந்த இடத்தில் தடவினால் பருக்கள் மறைந்துவிடும்.

# நோய்களைக் குணமாக்கும் தண்ணீர்.....

நோய்களால் அவதிப்படும்போது மருத்துவரின் பரிந்துரையின்பேரில் பணம் கொடுத்து மருந்துகளை வாங்கிசாப்பிடுகிறோம். ஆனால், பணம் செலவழிக்காமல் நமக்கு ஆரோக்கியமான வாழ்க்கை தருவதுதான் தண்ணீர். மனிதனின் உடல்உழைப்புக்கு ஏற்றவாறு நீர்ப்போக்கு ஏற்படுகிறது, ஒருநாளைக்கு ஆண்கள் 3 லிட்டர் தண்ணீரும், பெண்கள் 2.2 லிட்டர் தண்ணீரும் அருந்த வேண்டும். தினமும், உடலுக்குத் தேவையான அளவு தண்ணீரை எடுத்துக்கொள்வதன்மூலம், நம்மை எந்தநோய்களும் நெருங்கவிடாமல் தடுக்கலாம்.

1. காலையில் எழுந்ததும் பல் துலக்கும்முன்பே 160மிலி (4 டம்ளர்) தண்ணீர்அருந்துங்கள்.

2. பல்துலக்கி வாய்அலம்பியபின் 45 நிமிடங்களுக்கு உணவோ, நீராகாரம்எதுவாயினும் உட்கொள்ளக்கூடாது.

3. 45 நிமிடங்களுக்குப்பின் வழமையான உங்கள்உணவை உட்கொள்ளலாம்.

4.காலை உணவுக்குபின் 15 நிமிடங்களுக்கும், மதியம் மற்றும் இரவு உணவிற்குபின் 2 மணிநேரங்களுக்கும் எதுவும் உட்கொள்ளவேண்டாம்.

5. முதியோர், நோயாளிகளால் ஆரம்பத்திலேயே 4 டம்ளர் நீரை அருந்த முடியாவிட்டால், கொஞ்சம் கொஞ்சமாக நீர் உட்கொண்டு நாளடைவில் 4 டம்ளர் அளவுநீர் அருந்தபழகலாம்.

**எந்தநோய்க்கு எத்தனைநாட்கள் இந்த முறையைப் பின்பற்றவேண்டும்:**

-உயர்இரத்தஅழுத்தம் - 30 நாட்கள்.
-வாய்வுக்கோளாறுகள் - 10 நாட்கள்.
-சர்க்கரைவியாதி - 30 நாட்கள்.
-புற்றுநோய் - 180 நாட்கள்.
-காசநோய் - 90 நாட்கள்.

இதனைப் பின்பற்றி வாழ்ந்தால் நோய்கள் குணமாகும்....

# இன்றையபெண்கள்நிலை...

திருமதி.கெங்கா ஸ்ரான்லி-ஜேர்மனி

பெண்என்றால் மென்மையானவள், தெய்வம்போன்றவள். இப்படிப் பலவாறாகப் பெண்களைப் புகழ்வர் ஆனால் நடைமுறையில் அந்தப் பெண்படும்பாடு யாருக்தெரியும்."மங்கையராகப் பிறப்பதற்கே நல்லமாதவம் செய்திடவேண்டும் அம்மா" எனப்பாடினார் தேசியவிநாயகம்பிள்ளை. ஆனால் அப்படிப்பிறப்பது பெரியபாவம் எனத்தோன்றுகிறது. அந்தக்காலத்து அறிவு வளர்ச்சியில் பெண் அடிமையாக இருந்தாள். ஆனால் இப்போது இந்தநவீனஉலகவளர்ச்சியிலும் பெண்களுக்கு நடக்கும் கொடுமைகள் அப்பப்பா! இதை என்ன சொல்வது. முன்பு நாம் கேள்விப்படாத விசயங்கள்கூட இன்றைய நடைமுறையில் நடக்கிறதே!.

பொதுவாக இன்றைய சூழலில் பாலியல் கொடூரம்மிகவும் கொடுமை. அது சிறுகுழந்தையோ அன்றிவயதுவந்த மூதாட்டியோ இது எல்லாம் ஆறறிவு படைத்த மனிதரின் மூளைக்குத் தெரியவில்லையா?இப்படிச் செய்வதுதவறுஎன்று. கணணியில் ஒருசெய்தி ஒரு இறந்தபெண்ணின் புதைக்கப்பட்ட சடலத்தைதோண்டிஎடுத்து பலாத்காரம்செய்த ஒருமனிதன். இவன்ஒருமனிதனா? மனிதகுலத்திற்கேஅவமான!.இப்போது விஞ்ஞானம் இவ்வளவு முன்னேறிக் கொண்டுபோகையில், அறிவுவளர்ச்சியின் பரிணாமம் மேலோங்குகிறது. அனாலும் அறிவற்றசெயல்களும் ஆங்காங்கே நடக்கத்தான் செய்கின்றன.

ஒரு ஆண் இப்படித்தவறு செய்கையில் தன்தாயை, சகோதரியை நினைத்தால், இப்படிதவறு செய்யவாய்ப்பில்லை. ஆனால் அவர்கள் அப்படிநினைப்பதில்லையே! பாரதி கண்டபுதுமைபெண் வீறுகொண்டு எழுவதுபோல், இந்தநாளில் அப்படி எழுந்தால் குற்றங்களைத்தடுக்கலாம், ஆனால் எவ்வளவு செய்தாலும் அதைமுற்றாக அழிக்கமுடியுமா என்பது சந்தேகமே!.. சிறிதளவு குறைக்கலாமா என்றால் ஒருபக்கம் குறைந்துகொண்டுபோனால் மறுபக்கம் கொழுந்துவிட்டெரிகிறதே! ஈழத்தில் பெண்களுக்கு நடக்கும் அநீதிகள்மிகவும்அதிகம். உலகளவிலும்அப்படித்தான். ஆனால் அதற்கு சட்ட நடவடிக்கை ,நீதி ,தீர்வுதான் சரியாகஇல்லை, அதனால் முடிவும் சரியாக அமையவில்லை. மிகவும் கொடுமையானது பெற்றதந்தையே மகளைவல்லுறவுக்கு உள்ளாக்குவது. இப்படிப்பட்ட தந்தை உயிருடன் இருக்கவேண்டுமா? இந்த ஈனப்பிறவிகளை என்ன செய்வது? நாகரிகமான உலகில் பெண்ணின் கதி என்னவாவது.

நாகரிகமோகத்தினால் நல்லுடைதவிர்தனர் அதனால் ஆணின்ஆவலைத் தூண்டல் அங்கேவிளையும் அசம்பாவிதம் அதற்கு பெண்தானே காரணம். இது தவிர்க்கப்படவேண்டும். பெண்ணானவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்புடன் இருக்கவேண்டும். அதனால் கையெடுத்துக் கும்பிடாவிட்டாலும் மதிப்திப்புகிடைக்கலாம் இல்லையா? பெண்என்றால் பேயும்இரங்கும் அக்காலபழமொழி, இக்காலம்பெண் பேயாகமாறிப் பழிவாங்கினால் மக்கள் திருந்தவழியுண்டு, கொடுமைகளும்குறையும்எனலாம்.படிக்காத பாமரர்மட்டும்பெண்ணுக்கு அநீதிஇழைக்கவில்லை.

படித்தபுத்திஜீவிகளும் தவறுசெய்கையில் யாரைநோவது? அன்று கண்ணகி பாண்டியனிடம் நீதி கேட்டாள்,இன்று பெண்கள் யாரிடம்கேட்பது? கேட்டாலும் கிடைக்குமாஎன்ன?. இப்போதான் எல்லா மக்களுக்கும் தெரியும் எந்தமூலையில் அதுநடந்தாலும் அறியும் சந்தர்ப்பம். கணணிமூலம் அறியக்கூடியதாக இருக்கிறதே! அதனால பெண்கள் விழிப்புணர்வுடன் இருக்கலாம். இவ்வளவுபிரச்சனை , பின்னடைவு, பலாத்காரம், அடிமை த்தனம் இருந்தாலும் பெண்கள் இன்று முன்னேற்றப்பாதையில்முன்னே றிக்கொண்டிருப்பது மறுக்கமுடியா, பெருமைக்குரியசெயல்.மகிழ்ச்சியுடன் பாராட்டப்படவேண்டியது.

எத்தனையோபெரிய பதவிகள், சாதனைகள் படைக்கிறார்கள். ஒரு இந்தியபெண் விண்வெளி சென்றுஇறந்தாள். எனக்கேள்விப்பட்டோம். இப்போது தமிழ்பெண் ஒருவர்விண்வெளிசெல்ல ஆயத்தமாகின்றார்என செய்தியில் வாசித்தது. இப்படிப் பெண்களின் வளர்ச்சி அமோகமாக மிளிர்கையில் ஆங்காங்கே நடக்கும் சிலஅவலங்கள் மனதைக் கவலைப்படுத்துகின்றன. அதற்குச் சரியானமுறையில் தீர்வுகண்டு, பெண்கள்போகும்பாதை சீராகி மென்மேலும் விரியவேண்டும் இன்னும் உயர்தடம் பதிக்கவேண்டும். பெண்கள் இல்லாத இடம்எப்படி இருக்கும் ,அங்குஒளிஇல்லை, அழகில்லை, அன்பு இல்லை, இவை இல்லையெனில் வாழ்க்கையில் சுவைதான்ஏது? ஆகவே பெண்ணையும் ஒருஉயிர் இனமாகமதித்து அவளை வாழவிடுங்கள். பெண்கள் நாட்டின்கண்கள், வீட்டின் விளக்குகள். பிள்ளைகளைபெற்றெடுக்கும்கருவறை ,மனிதன் ஆரம்பமாகும்இடம். இவ்வளவு தெய்வீகத்தன்மைகொண்ட பெண்களை வணங்கிவாழ்த்தவேண்டாமா? போற்றாவிட்டாலும் ,அவளைத் தூற்றாதீர்கள். பெண் என்பவள் பெருமைகுரியவள்,அந்தப்பெண் இன்றி எந்தச் சாம்ராச்சியமும் இருக்கமுடியாது. இதைஉணர்ந்தால்,பெண்ணுக்கு எந்தத்தீமையும்வராது, எல்லோரும் சந்தோசமாக வாழலாம்!...

# சர்வதேச மகளிர் தினம்!...

கவி.மீனா.ஜேர்மனி

ஆண்டு தோறும் மார்ச் 8 ஆம் தேதி அன்று சர்வதேச மகளிர் தினம்உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. ஆணாதிக்க சமுதாயத்தில் இருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் இது என்றே குறிப்பிட வேண்டும். பெண்களுக்கான சமத்துவ உரிமைகளை வலியுறுத்துவதற்காகவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. 1921ம் ஆண்டு முதல் மார்ச் 8ம் தேதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. அமெரிக்காவில் பெண்கள் புரட்சி ஆரம்பித்து ரஸ்யா ஜேர்மனி போன்ற நாடுகளிலும் ஆண்களுக்கு சமமாக ஊதியம் வேண்டிப் பெண்கள் போராடிச் சம உரிமையைப் பெற்று கொண்டதால் இந்த மகளீர்தினம் கொண்டாடப்பட்டது.

இந்தியாவில் பெண்களுக்காக புதியதோர் உலகம் செய்வோம் என பாரதியாரே பாடிப் புதுமைப் பெண்களை உருவாக்கினார், ஆணுக்கு அடிமையாய் வாழ பிறந்தவள் அல்ல பெண் என்று ஒரு ஆண்மகனே அன்று எடுத்துகாட்டினார், பெண் எனப்பட்டவள் பெருமைக்குரியவள், பெண் சக்தியின் ஒரு அம்சம், அப்படிப்பட்ட பெண் அடிமைச்சாசனம் எழுதிக்கொடுத்தது போலே காலம் காலமாக ஆண்களுக்கு அடிமையாய் ,அடுப்பங்கரைப் பூனைகளாய், பிள்ளைகளை பெற்றுத்தள்ளும் இயந்திரமாய், ஆண்மகனுக்கு ஆசைகளை தீர்க்கும் பெண்ணாய், மட்டும் வாழ்வதற்காக ஆண்டவன் படைத்தது போலே தமிழ் பெண்கள் வாழ்ந்தது ஒரு காலம். பைபிளை கையில் தூக்கும் சில மூடர்கள் கூட இன்றும் சொல்கிறார்கள் அவர்களுடைய மதத்திலே ஆணுக்காகதான் பெண்ணை அவனது விலா எலும்பிலிருந்து ஆண்டவன் படைத்ததாகவும், அதனால் கை கட்டி வாய் பொத்தி ஆண்மகனுக்கு அடிபணிந்து, அவனது இச்சைகளுக்கு க்கட்டுப்பட்டு, ஆசைகளை தீர்த்து அடங்கி வாழவேணும் பெண் என்று பெண்ணை அடக்கியே வாழ எத்தனிக்கிறார்கள் சில ஆண்கள் இன்னும். பெண்ணுக்குள் இருப்பதும் ஓர் உயிர்தான் அவளுக்கும் ஒரு மனமும் ஒரு வாழ்க்கையும் இருக்கிறது என்பதை மறந்து போனது சமுதாயம் ,

ஆனால் இன்று பெண்கள் படித்து முன்னேறிவிட்ட காலம் தனியாகவே சாதனைகளை படைத்து, சரித்திரத்தில் இடம் பிடித்து , அடிமைதனத்தை ஒளித்து, உலகுக்குப் பெண்ணின் பெருமைகளை எடுத்துச் சொல்பவளே பெண். இப்படி பெண்கள் முன்னேற்றம் அடைந்த காலத்தில் கூட இன்னும் பட்டிக்காட்டுப் பெண்கள் சில பெண்களின் முன்னேற்றுத்துக்கு இடைஞ்சலாக, சேற்றிலே புரளும் காட்டு எருமைகளை போலே, அடிமைவாழ்வில் உளன்று கொண்டு, கணவன்மாரின் காலடியில் உதைபட்டு ஏச்சும் பேச்சும் மட்டும் இன்றி அடியும் சித்திரவதையும் பட்டுகொண்டு வாழகிறார்கள்.

இவர்கள் தனித்து முன்னேற வழிதெரியாத காரணத்தாலும், கல்வி அறிவு இல்லாத காரணத்தாலும், தன்கையாலே நாலு காசு சம்பாதித்து தன் வயிற்றை கழுவ முடியாத காரணத்தாலும், தன் வயிற்றில் உதித்த பிள்ளைகளை நல் வழி படுத்த தெரியாமல் போவதாலும், தலை குனிந்து அடுப்பங்கரையிலே ஆண்களின் விருபத்துக்காக மட்டுமே அவன் வரும் நேரம் சமையலை செய்து, அவன் விட்ட மிச்சத்தை உண்டு, கட்டிலிலே மனம் விரும்பாவிடிலும் அவனுக்காக தாதியாக கிடந்து, அல்லலுறும் பெண்கள் ஒரு ஈனப்பிறவிகளே, பாவப்பட்ட ஜீவன்களே.

இப்படிப்பட்ட பெண்கள் சுதந்திரமாய் ,ஒழுக்கமாய், மற்றுப் பெண்கள் வாழ்ந்தாலும் அதை எள்ளி நகையாடி தமது மனக்குறையை தீர்த்துக் கொள்வதில் மட்டும் பேரின்பம் காண்பது போல் நடித்து கொண்டு மனதுக்குள்ளே அழுகிறார்களே, அவர்களைப்போலே பெண்களுக்கு எல்லாம் மகளீர் தினம் தேவையில்லை, பெண்ணாகப் பிறந்திட பெரும் தவம் செய்திட வேண்டும் என்று சொன்ன பாரதியும் இவர்களை கண்டால் கண்ணீர்தான் வடிப்பார்.

பெண்கள்தான் ஆக்கத்துக்கும், அழிவுக்கும் காரணம், ஒரு பெண் இல்லையேல் ஒரு ஆணுக்கு வெற்றியும் இல்லை இன்பமும் இல்லை என்பதை உணுருகின்ற ஆண் மகன் காட்டும் அன்புக்கு மட்டுமே பெண் கட்டுப்படவேணும், ஒரு தாயை அன்பின் தெய்வமாய் மதிக்கின்ற புத்திரர்களை பெற்று நல் வழிப்படுத்துவதால் கூட ஒரு பெண் சமுதாயத்தில் மதிக்க படுகிறாள், அவளது சமூக சேவையாலும், பிறரிடத்தில் காட்டுகின்ற அன்பினாலும், அவள் மற்றவர்களால் போற்ற படுகிறாள், அவளது கல்வி திறமையாலும், நல்ல பதவியாலும், அறிவான செயல்களாலும் ,அவள் கீர்த்தியை பெறுகிறாள், இப்படிப்பட்ட அறிவான அன்பான பெண்கள் வாழ்ந்தாலே பெண்களுக்குப் பெருமை.

மகளீர் தினத்தை கொண்டாடும் இன்னாளில் பெண்ணின் பெருமை பற்றி எடுத்துச்சொல்வதில் நான் பெருமை படுகிறேன், அடிமை வாழ்வு என்னும் அன்பில்லாத சேற்றிலே கிடந்து உளரும் சில பெண்கள் இதை பார்த்தாவது தம்மை திருத்திக்கொள்ளட்டும், இல்லை சுதந்திரமாய் நின்மதியாய் வாழும் மற்றப்பெண்களை நையாண்டி பண்ணாமலே வாழ ப்பழகிக் கொள்ளட்டும் என்பதே என் வேண்டுகோள்.

# அண்மையில் நான் சந்தித்த சாதனைப் பெண்...
(உண்மைச்சம்பவம்)

திருமதி. கலைவாணி
ஏகானந்தராசா
ஜேர்மனி.

நான் பயனித்த பஸ் வவுனியா நோக்கி சென்றுகொண்டிருந்தது. தெரிந்த ஒருவரை சந்திப்பதற்காக சென்றிருந்தேன். ஒரு காட்டுப் பிரதேசத்தில் இறக்கிவிட்ட பஸ் நடத்துனர் இங்கிருந்து இரண்டு மைல் தூரம் சென்றால் தான் நான் போகவேண்டிய விலாசத்தை சென்றடையலாம் என்பதை தெரிவித்தார். நல்லவேளை வெயில் கொடுமை இருக்கவில்லை. ஆகவே நடந்து போகலாமா என்று சிந்தித்தபோது எங்கள் அருகே ஒரு முச்சக்கரவண்டி வந்து நின்றது. 'எங்கே போகவேண்டும்' என அந்த ஓட்டுனர் விசாரித்தார். நாம் விலாசத்தை தெரிவித்துவிட்டு உள்ளே ஏறி அமர்ந்தோம். காடு மேடு பள்ளம் திட்டி எல்லாம் விழுந்து எழுந்து நெளிந்து நெளிந்து ஓட்டினார் சாரதி. பள்ளங்களில் வெள்ளம்.அதை விலத்தினால் கல் திட்டி. வேறு வளியில்லை என்பது எமக்கும் புரிந்ததால் அங்கும் இங்குமாக சரிந்து வாகனத்தின் பக்கங்களில் முட்டி மோதியவாறே சேரவேண்டிய இடத்துக்குச் சென்றடைந்தோம். வாகனத்திலிருந்து கீழே காலை வைத்தபோது கால் சேற்றில் புதைந்தது. உள்ளேயிருந்து ஓடிவந்த பெண் எனக்கு உதவினார். நாம் வாகனத்திலிருந்து இறங்கி இவர்களின் வீட்டிற்குச் செல்வதற்கு 20 தொடக்கம் 25 மீற்றர் தூரம் இருந்தது.

எமது வருகைக்காக அவசர அவசரமாக அவர்கள் அந்தப் பாதைக்கு பலகைகளையும் .குத்திகளையும் செங்கட்டிகளையும் ஓரடிப்பாதையாக அமைத்திருந்தமை எமக்கு மன நெகிழ்வைத் தந்தது. 'மழை தொடர்ந்து பெய்ததால் 'ஒரு மாதமாக இப்படித்தான் சமாளிக்கிறோம்' என்று கூறினர். நான் இடம் பெயர்ந்த பின் திருமணமான இந்தப் பெண்ணை 30 வருடங்களுக்கு முன் சிறுமியாகத்தான் பார்த்த ஞாபகம். மெலிந்த சிறிய தோற்றமுள்ள அந்தப் பெண் எங்களை சேற்றில் புதைந்து விடாமல் கையில் பிடித்து அழைத்துச் சென்றார். இரண்டு அறைகள் கொண்ட ஒரு சிறிய வீட்டின் தாழ்வாரத்தில் இரண்டு கதிரைகள் எமக்காக போட்டனர். அதில் அமர்ந்தபடியே கண்களை சுழற்றி நோட்டம் விட்டேன். அறைகளுக்குள் கட்டில் தளபாடங்கள் ஒன்றிரண்டு காணப்பட்டன.குழந்தை தூங்குவதற்காக ஏணை கட்டப்பட்டிருந்தது. தொடர்து பெய்த மழையினால் வீட்டினுள் மழை பெய்தது போல நிலம் ஊறி ஈரமாக இருந்தது. மெல்ல என் சந்தேகங்களை வினாவாக எழுப்பினேன். 'எத்தனை பிள்ளைகள் உங்களுக்கு ? மூன்று பிள்ளைகள் கையில் வைத்திருப்பவருக்கு இரண்டு வயது இவருக்கு

மூத்தவர் படிக்கிறார் இவளுக்கு 7 வயது. மூத்தவர் பத்து வயது ஐந்தாம் வகுப்பு படிக்கின்றார் நல்ல கெட்டிக்காறன் என்று கூறியவர் தொடர்ந்து ஒரு பெருமூச்சுடன் அவர் புலமைப்பரீட்சையில் சிறப்பான புள்ளிகள் பெற்றிருக்கிறார். ஆனாலும் மேல்நிலைப் பாடசாலைக்கு அனுப்ப முடியவில்லை காரணம் போக்குவரத்து பிரச்சனை என்றார்.

அப்பொழுது தோட்டத்திலிருந்து அப்பெண்ணின் கணவரும் மற்றைய இரண்டு பிள்ளைகளும் அங்கு வந்தனர். அறிமுகப்படுத்திக்கொண்ட பின் மூத்தவனிடம் 'நீங்கள் தோட்டத்திற்கு போய் என்ன செய்தீர்கள் என்று கேட்டேன். அதற்கு மூத்தவன்தான் பதில் சொன்னான். 'உரத்தை தங்கச்சி பைக்குள் நிரப்பித் தர நான் அப்பா உரம் வீசும் இடத்திற்கு கொண்டு சென்று கொடுத்தேன்' என்றான். அப்போ இரண்டு பசு மாடுகள் 'அம்மா' என்று கத்தியபடி வீட்டை நோக்கி வந்தன. அந்த மூன்று பிள்ளைகளின் தாயானவள் ஓடிச்சென்று அந்த பசுக்களை மரங்களில் பிடித்துக் கட்டினாள். அதில் ஒரு பசுவின் கன்றுக்குட்டி ஓடிவந்து தாயின் மடியில் முட்டிப் பால் குடித்தது. .. அந்தக் கன்றைப் பிடித்து கட்டுவதற்காக அங்கு வந்த கணவரிடம் அந்தப் பெண்மணி வேண்டாமப்பா கன்று போட்டு ஒரு வாரம் தானே ...இன்னம் ஒரு வாரம் குடிக்கட்டும் எங்கட பிள்ளையளுக்குப் பால் இல்லாட்டா பறவாயில்லை, வாடிக்கையாளருக்கு பால் கொடுக்கலாம் என்று கூறியபடி பசுக்களைத் தடவிக் கொடுத்தாள்.

அந்த தாயுள்ளத்தை மனதார வாழ்த்தினேன். பசுக்களின் உயரமோ அந்தப் பெண்ணைவிட இருமடங்கு இருக்கும். எனக்கு பயமாக இருந்தது. அவள் கணவர் கூறினார் ' என்னையும் முட்டிவிடும் எனக்கும் பயம் தான் என்றார். அவள் சாமர்த்தியத்தை உளமாரப் போற்றினேன். அப்படியே தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். பத்துப் பதினைந்து கோழிகள் அங்குமிங்குமாகக் காணப்பட்டன. முற்றத்தினருகே பாக்கு மரங்களில் குலை குலையாக பாக்குகள் தொங்கின. மரத்தின் கீழ் பாக்குகள் காய விடப்பட்டிருந்தன. ஒரு பக்கமாக எள்ளும், மற்றுமொரு பக்கம் பயறும் காய விடப்பட்டிருந்தன.தோட்டத்தை சுற்றிப் பார்கையில் பத்து பன்னிரண்டு தென்னைகள் காய்களுடனும் செவ்விளநீர் மரங்கள் இளநீர் குலைகளுடனும் காட்சி தந்தன. அவைமட்டுமா ? தேசிக்காய் மரம்முழுவதும் காய்த்துத் தொங்கின. அதைவிட மாமரங்கள்.. பலாமரங்கள்...ஜம்பு நாவல்... கொய்யா.. மாதுளை.. பப்பாசி மரங்கள் ..ஈரப்பிலாக்காய்.. எல்லாமே அங்கு காணப்பட்டன. ஒரு தாவரவியல் பூங்காவில் நிற்பது போன்ற உணர்வைத் தந்தது. வீட்டின் பின் பகுதியில் நீளமாக மிளகாய்ச் செடிகளும் கத்தரிச் செடிகளும் பாத்திகளருகே மரவள்ளியும் வேலி போல சுற்றி பாவற்காய் செடியும் நாட்டப்பட்டிருந்தன. வீட்டின் ஒருபக்கத்தில் பல வர்ண நிறங்களில் ரோஜா செடிகள் பூத்துக் கண்களைப் பறித்தன.

அங்கே சிறு சிறு பைகளில் ரோஜா தடிகளை ஊன்றி பதியம் வைக்கப்பட்டிருந்தன. சில பைகளில் இரண்டு மூன்று நிறங்களைச் சேர்த்து ஒட்டுப் போட்டு வைக்கப்பட்டிருந்தன. எனக்குள் ஒரு கேள்வி எழுந்தது. இவ்வளவையும் யார் செய்கிறார்கள்?பசுவில் பால் கறந்துவிட்டு வந்த அந்த பெண்மணியிடம் 'நீங்கள் தோட்ட வேலைகளில் கணவருக்கு உதவி செய்வீர்களா? ' என்று கேட்டேன். அவர் பலமாக சிரித்தார். இவை எல்லாம் நான் தான் செய்கிறேன். என் கணவர் கட்டிட வேலைக்காக அடுத்த ஊருக்குக்காலை ஐந்து மணிக்கே சென்றுவிடுவார். மாலையில் தான் வீடு திரும்புவார். வேலை இல்லாத நேரங்களில் கணவரும் பிள்ளைகளும் சற்று உதவி செய்வார்கள்.' என்றார். திகைப்புடன் அவரைப் பார்த்து '..உங்கள் குடும்ப நிலமை பற்றி தெரிந்து கொள்ளலாமா ? என்று கேட்டேன். ..

நான் ஒரு பட்டதாரி ஆசிரியை. இனக்கலவரத்தின்போது இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் இருந்து ..இறுதியில் தொழிலை கைவிட்டு பெற்றோருடன் இங்கு வந்து சிறு குடிசையை அமைத்துக்கொண்டு இங்கேயே தங்கிவிட்டோம். நாம் இங்கு வந்து பன்னிரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. என் பெற்றோர்தான் தினமும் கஷ்டப்பட்டு இந்தக்காட்டை வெட்டி இப்போ எமக்கு வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் போதுமான காணியைப்பிடித்துத் தந்தார்கள். எம் பெற்றோர் தற்போது உயிருடன் இல்லை. எனக்கு திருமணமாகி அடுத்த ஆண்டில் காலமாகிவிட்டார்கள். அரசாங்க உதவியாக கிடைத்த வீட்டுத்திட்டத்தில் இந்த சிறிய வீட்டைக் கட்டினோம்.

இந்தப் பசு மூன்று தடவை கன்று போட்டது. அதனை விற்றும் பால் விற்றும் கடனை கட்டி முடித்தேன்.இப்போ நிற்கும் இரண்டு பசுவிலும் பால் எடுத்துக் காலையில் துவிச்சக்கரவண்டியில் கொண்டு போய் வீடு வீடாகக் கொடுத்து வந்தேன். இந்த மாதம்தான் பால்பண்ணையிலிருந்து பால் சேகரிக்கும் வண்டி வந்து பாலை எடுத்துச் செல்கிறது. இது எனக்கு சற்று உதவியாக இருக்கிறது. இல்லையேல் காலை 6மணிக்கு முன் ஒருமுறை இவ்வளவு தூரம் சையிக்கிளில் சென்று பின் வீட்டுக்கு வந்து பிள்ளைகளை தயார் செய்துபாடசாலையில் விட்டுவிட்டுவருவேன். மதியம் அவர்களை கூட்டிவரமுன் தோட்ட வேலைகளைப் பார்த்து சமையலையும் முடிப்பேன். மாலை பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த பின் விற்பனைக்குக்கொண்டு செல்லக்கூடிய மரக்கறிகளைச் சேகரிப்பதும் மா இடிப்பது இரவு சமையல் என்று என் பொழுது போகிறது. மரக்கறிகளை விற்றுத்தான் சமையலறை தளபாடங்கள் பிள்ளைகளின் துணிமணிகள் வாங்கினேன். ரோசாக் கன்று பதிவைத்து விற்பதில் தற்போது மகனுக்கு

ஒரு துவிச்சக்கர வண்டிக்கான பணம் சேர்த்து வைத்திருக்கிறேன். அடுத்த தடவை பசு கன்று போட்டால் வீட்டின் முன் தாவாரத்தை அடைத்து நிலம் போட்டுவிடலாம் .. இப்படி தனித்தனி உண்டியலில் சேர்த்துதான் ஒவ்வொன்றாக செய்யமுடிகிறது.' என்று தன் வாழ்க்கைப் பாதையை மீட்டியபடியே எமக்கு எள்ளுப்பாகு இடித்து உருட்டி தேநீரும் கலந்து தந்தார். அப்போது மூத்த மகன் தோட்டத்திலிருந்து மரக்கறிகள் சில கொண்டு வந்தார். இவனுக்கு துவிச்சக்கரவண்டி எடுத்து கொடுத்துவிட்டால் இவனை பாடசாலை கொண்டு செல்லும் வேலையும் குறையும்..மாலையில் பிரத்தியேக வகுப்புக்கும் அனுப்பலாம் என்றிருக்கிறேன். அதற்காக அவர் செய்யும் வேலைக்கு சிறிது பணம் ஒதுக்குவேன். இப்போது பாடத்திட்டங்கள் மாறியிருப்பதால் எனக்கு பாடங்களில் உதவி செய்ய முடியவில்லை என்றார். அப்போதான் அங்கு வந்த இரண்டாவது மகளின்

முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். மனம் திக்கென்றது. இந்த அழகான பெண் பிள்ளைக்கு இப்படி ஒரு கொடூரமா? இறைவா இது என்ன சோதனை .. எப்படி இது என்று கேட்க மனம் துடித்தாலும் ..தாயின் மனம் நொந்து போய்விடும் என்றெண்ணிக் கலங்கிய கண்களை துடைப்பதற்காய் மறு பக்கம் திரும்பினேன். என் மன ஓட்டத்தை புரிந்து கொண்டவள் போல அவளே ' இறுதிப் போர் நடந்துகொண்டிருந்தபோது இவள் முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தாள் .வெடித்து வீழ்ந்த செல் துண்டு இவள் முகத்தை பதம்பார்த்துவிட்டது.' என்று கூறினாள். உள்ளே சென்று தானே தயாரித்து சீல் போடப்பட்ட ஒரு சல்லிமுட்டியை எடுத்துவந்து ' இதற்குள் பால் விற்கும் பணத்தையும் கோழிமுட்டை கோழிக்குஞ்சு தேங்காய் போன்றவை விற்று வரும் பணத்தையும் சேகரித்து வருகிறேன். இவள் முகத்தை சீராக்க 50 ஆயிரம் ரூபா தேவைப்படுகிறது. அரைவாசிப்பணம் சேர்ந்திருக்கும் என நினைக்கிறேன்.' என்று கூறியபடி உள்ளே செல்ல திரும்பியவளின் கையை நான் பிடித்தேன். என் கைப் பையில் இருந்த 25 ஆயிரம் ரூபாவையும் அந்தப்பெட்டியில் போட்டுவிட்டு "கூடிய விரைவில் பணத்தைக் கட்டி பிள்ளையின் சத்திர சிகிச்சைக்கு ஆயத்தம் செய்யுங்கள்" என்று நான் கூறியபோது அந்த தாயின் முகத்தில் தெரிந்த பிரகாசம் பிள்ளையின் முகத்தில் எதிரொலிப்பதைக் கண்டேன்.

அந்த சாதனைப்பெண்ணை வாயார வாழ்த்தினேன். இப்படி ஒரு பெண்ணை சந்தித்ததில் நிறைவான சந்தோஷம் மனதை நிறைத்திருக்க யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பினோம்.!......

# பெண்களுக்கு ஆபத்தான நாடுகள் வரிசையில்...

என்று ஒரு பெண் இரவில் தனியாக ஊருக்குள் நடமாட முடிகிறதோ அன்றுதான் நாட்டுக்கு உண்மையான சுதந்திரம் என்றார் தேசப்பிதா. பெண் நல சிந்தனைகள் பேச்சில்தான் இருக்கிறது ,ஆனால் நாளுக்கு நாள் பெண்கள் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் கடும் இன்னல்களுக்கு உள்ளாகி வருகிறார்கள் .இந்நிலை பல நாடுகளிலும் உள்ளது .சமீபத்தில் அமெரிக்கா போஸ்டன் நாளிதழில் உலகிலேயே பெண்களுக்கு அதிக தீங்கிழைக்கும் சில நாடுகளின் பட்டியல் வெளியானது. இப்போது அது உங்கள் பார்வைக்கு.

1 .ஆப்கானிஸ்தான்
பெண்களுக்கெதிராக அதிக வன்முறைகள் நிகழும் நாடு .மோசமான பொருளாதார சூழ் நிலைகள் சுகாதார சீர்கேடு போன்றவற்றால் இங்குள்ள பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள் .

2 .காங்கோ
உலகிலேயே பாலியல் வன்முறைகள் அதிகம் நிகழும் நாடு .ஒவ்வொரு வருடமும் 4 லட்சத்திற்கும் அதிகமான பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாகிறார்கள் .

3 .பாகிஸ்தான்
மத ரீதியான வன்முறைகள் ,திராவகம் வீச்சு பெண்கள் மீது நிகழ்த்தப்படுகிறது .குழந்தை திருமணங்கள் அதிகம் நிகழ்கின்றன .

4 .இந்தியா
பல்வேறு காரணங்களுக்காக பெண்கள் கடத்தப் படுகிறார்கள் .கடந்த நூற்றாண்டில் பாலியல் தொழிலுக்காக மட்டும் 50 லட்சம் பெண்கள் கடத்தப்பட்டுள்ளார்கள் இவர்களில் 40 சதவீதம்பேர் பருவ வயதை எட்டாதவர்கள் என்பது இன்னும் வேதனையான விஷயம் .

5 .சோமாலியா
பெண்களுக்கெதிராக அதிக பாலியல் வன்முறைகள் நிகழ்கின்றன .பெண் கல்வி ,சுகாதாரம் மிகவும் குறைவாக உள்ள நாடு .

பெண்களுக்கெதிரான இந்த தீமைகள் குறைந்தால்தான் உலகம் செழிக்கும் .

## உலக மக்கள் தொகையில் ஒருசதவீதத்தினரிடம் செல்வந்தம்!

உலக சனத்தொகையில் ஒரு சதவீதமான செல்வந்தர்கள், அதாவது கிட்டத்தட்ட7 கோடியே 30 லட்சம் பேர் உலகின் ஏனைய மக்களின் ஒட்டுமொத்த செல்வத்திலும் பார்க்க அதிக செல்வத்துக்கு சொந்தக்காரர்கள் என்றுஒக்ஸ்ஃ பாம் (OXFAM) எனப்படுகின்ற உதவி மற்றும் அபிவிருத்திக்கான தொண்டு நிறுவனம் கூறுகின்றது உலக சனத்தொகையின் அரைவாசியானவறிய மக்களின் ஒட்டுமொத்த செல்வத்திலும் பார்க்க அதிக செல்வம் உலக பணக்காரர்கள் வரிசையில் உள்ள 62 பேர் வசம் உள்ளதாகவும் உலக ஏற்றத்தாழ்வு பற்றிய ஒக்ஸ்ஃபாமின் புதிய அறிக்கை மதிப்பிட்டுள்ளது. சுமார் ஏழரை ட்ரில்லியன் டொலர் (ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் கோடி டாலர்) மதிப்பிலான செல்வத்தை உலக செல்வந்தர்கள் தங்களின் தாய்நாடுகளுக்கு வெளியே உள்ள வரிசெலுத்துவதிலிருந்து தப்பிக்கக்கூடிய இடங்களில் பதுக்கி வைத்துள்ளதாக அந்தத் தொண்டுநிறுவனம் கூறுகின்றது. இந்த வரிஏய்ப்பை முறியடிக்க அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் ஒக்ஸ்ஃபாம் கேட்டுக்கொண்டுள்ளது. இவ்வாறு பதுக்கிவைக்கப்பட்டுள்ள செல்வத்தில் சுமார் 50 ஆயிரம் கோடி மதிப்பிலான சொத்துக்களுக்கு செல்வந்த ஆப்பிரிக்கர்களே சொந்தக்காரர்கள் என்றும் கூறுகின்ற ஒக்ஸ்ஃ பாம், அதனால் ஆப்பிரிக்கக் கண்டம் முழுமைக்கும் ஆண்டுக்கு 1400 கோடி டொலர் வரி இழப்பு ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

### உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கலாமா?

சோடியம் குளோரைட் என்ற உப்பையே நாம் தினசரி உணவில் பயன்படுத்துகிறோம். இந்த உப்பை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தினால், இரத்த அழுத்தம், இருதயக் கோளாறு உட்படப் பல நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இந்த உப்புக்குப் பதிலாக சீனாவில் 50 வீதம் சோடியம், 50 வீதம் பொட்டாசியமும் மக்னீசியமும் கலந்த புதிய ரக உப்பொன்றை அந்நாட்டு அரசு அறிமுகப்படுத்தி உள்ளது. இதனால் அந்த நாட்டில் இரத்தக் கொதிப்பு நோயும், சிறுநீரக நோயும் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன. ஒரு தனி நபருக்கு ஒரு நாளைக்கு 5 கிராம் உப்பு போதுமானது என உலக சுகாதாரஸ்தாபனம் வகுத்துள்ளது.

### சூரியனை மட்டுமே நம்பி வாழ்பவர்கள்!

700 கோடி கொண்ட உலக சனத்தொகையில் சுமார் 110 கோடி மக்கள் எந்தவிதமான மின்சார வசதியும் இல்லாதவர்களாக இருக்கின்றனர்.

# ஒரு நாளேனும் நிறுத்துங்கள்...

எஸ். ராஜாராம்
தமிழ்நாடு

சிரியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போருக்கு தாற்காலிகமாக முடிவு கட்டும் சண்டை நிறுத்த ஒப்பந்தம் (பிப்ரவரி 27) முதல் அமலுக்கு வரும் வாய்ப்பு நெருங்கியுள்ளது. அமெரிக்கா - ரஷியா இடையே கடந்த பிப்ரவரி 22-இல் கையெழுத்தான இந்த ஒப்பந்தத்தை சிரியா அதிபர் பஷார் அல் அசாத், அண்டை நாடான துருக்கி, சிரியாவின் அரசு எதிர்ப்புப் படைகள் என அனைத்துத் தரப்பினருமே ஏற்றுக்கொண்டிருப்பதால் ஐந்து ஆண்டுகால துப்பாக்கிச் சத்தம் சிறிது நாட்களாவது ஓயாதா என உலகமே எதிர்பார்க்கிறது.

இந்த ஒப்பந்தத்தின்படி, அரசுப் படைகளும், அரசு எதிர்ப்புக் குழுக்களும் சண்டையில் ஈடுபடாது. ஆனால், இஸ்லாமிய தேசம், அல்-காய்தாவின் சிரியா பிரிவான அல்-நுஸ்ரா ஆகிய பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிரான தாக்குதல் தொடரும். சிரியாவில் நடப்பது உள்நாட்டுப் போர் மட்டுமன்று அது பிராந்திய சக்திகள் இடையிலான மறைமுகப் போர் என்பது அமெரிக்க அதிபர் ஒபாமாவே வெளிப்படையாக ஒப்புக்கொண்ட விஷயம். ஒரு நாட்டை யார் ஆள வேண்டும் என அமெரிக்கா தீர்மானித்துவிட்டால் அந்த நாட்டில் நிம்மதி இருக்காது என்பது நடைமுறை யதார்த்தம்.

சிரியா அதிபராக பஷார் அல் அசாத் தொடரக்கூடாது என உறுதியேற்று அரசுக்கு எதிரான படைகளுக்கு வெளிப்படையாக முதலில் ஆயுதப் பயிற்சியளித்ததே அமெரிக்காதான். 2011, மார்ச்சில் உள்நாட்டுப் போராகத் தொடங்கிய இந்த விவகாரம், 2012இல் அமெரிக்கா தலைமையிலான சர்வதேச நாடுகளின் தலையீட்டைத் தொடர்ந்தே அப்பாவி மக்களின் உயிரைப் பறிக்கும் போராக மாறிப்போனது.

அண்மையில் அதிபர் அல் அசாத்துக்கு ஆதரவாக ரஷியப் படைகள் களமிறங்கியதும், ஏதோ ஒரு முடிவு கிடைக்கும்போலத் தோன்றியது. ஆனால், வழக்கம்போல குடிமக்கள் மீதான தாக்குதலாகத்தான் ரஷியாவின் வான்வழித் தாக்குதலும் ஆகிப்போனது.

கடந்த 5 ஆண்டு காலப் போருக்கு சிரியா கொடுத்த விலை மிக மிக அதிகம். அரசுப் படைகள் ஒருபுறம், அரசு எதிர்ப்புப் படைகள் மறுபுறம், இஸ்லாமிய தேசம், அல்-நுஸ்ரா போன்ற பயங்கரவாத அமைப்புகள் மற்றொரு புறம், இவை போதாதென சர்வதேச நாடுகளின் விமானத் தாக்குதல் என பலமுனைத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள் 2.50 லட்சம் பேர். 1.10 கோடிப் பேர் வீடுகளை இழந்து உள்நாட்டிலேயே அகதிகளாக உள்ளனர். 40 லட்சம் பேர் அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்கள் ஐரோப்பிய நாடுகளைச் சென்றடையும் நோக்கில், மத்தியதரைக்கடலை அபாயகரமான முறையில் கடந்து உயிரை இழப்பது தனிக் கொடுமை. சிரியாவில் நடைபெற்றுவரும் சண்டையால் நாட்டின் நவீன வரலாற்றில் 5 ஆண்டுகளைத் தொலைத்துவிட்டோம் 40 ஆண்டுகால சமூக, பொருளாதார வளர்ச்சியை நாடு இழந்துவிட்டது என்கிறார் மேற்கு ஆசியாவுக்கான ஐ.நா. சபையின் பொருளாதார, சமூக ஆணையத்தின் துணைச் செயலர் அப்துல்லா தர்கரி.

சிரியா மக்களுக்கான மனிதாபிமான உதவியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆனால், சுமார் 5 லட்சம் பேர் ஏதாவது ஒரு படையின் முற்றுகையிடப்பட்ட பகுதியில் இருப்பதாலும், 45 லட்சம் பேர் அணுகுவதற்கு கடினமான பகுதியில் இருப்பதாலும் அந்த உதவிகளைச் செய்வதற்கு இயலவில்லை என்கிறார் சர்வதேச செஞ்சிலுவை சங்க கமிட்டி தலைவர் பீட்டர் மௌரர். ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்ட அமைப்பு மூலம், டெய்ர்-எல்-ஷோர் என்கிற சிரியாவின் கிழக்குப் பகுதி நகரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வான்வெளியிலிருந்து 21 மெட்ரிக் டன் உணவுப் பொருள்களை போடுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இஸ்லாமிய தேச இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த நகரத்தில், தாக்குதல் அபாயம் காரணமாக மிக அதிக உயரத்தில் இருந்து உணவுப் பொருள்கள் போடப்பட்டன. ஆனால், அவை இலக்கை சரியாக அடையாததால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.மேலும், பல பகுதி களில் இந்த உணவுப் பொருள்கள் பயங்கரவாதிகள் கைவசமே சென்றடையும் அபாயம் இருப்பதால், வானில் இருந்து உணவுப் பொருள்களைப் போட அனுமதிக்கப்படவில்லை. சிரியாவின் உண்மையான நிலை இதுதான்.

உதவ முயன்றும் மக்களை அணுக முடியாத நிலை. இச்சூழ்நிலையில்தான் இச்சண்டைநிறுத்தம் முக்கியத்துவம் பெறுகிறது. இதைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்பதுதான் ஆறுதலான விஷயம். இந்த தற்காலிக சண்டைநிறுத்தத்தால் மட்டும் 5 ஆண்டுகால பிரச்னைக்கு உடனடியாக முடிவு கிடைத்துவிடப் போவதில்லை. சொல்லப்போனால், இந்த சண்டைநிறுத்தமே சில நாள்களுக்காவது நீடிக்குமா என்பதும் சந்தேகமே.

துருக்கியின் பாதுகாப்புக்கு பிரச்னை ஏற்படாதவரையில் சண்டைநிறுத்தத்தை மீற மாட்டோம் என அந்த நாடு உறுதி அளித்திருப்பதும், நாங்கள் தாக்குதல் நடத்த மாட்டோம் ஆனால், எங்களைத் தாக்கினால் சும்மா இருக்க மாட்டோம் என அரசுக்கு எதிரான, அமெரிக்க ஆதரவுப் படைகள் வாக்குறுதி கொடுத்திருப்பதும், சண்டைநிறுத்தத்தை குலைக்கும் வகையில் தொடர்ந்து தாக்குவோம் என இஸ்லாமிய தேசம் கொக்கரித்திருப்பதுமே, இந்தச் சண்டைநிறுத்த ஒப்பந்தத்தின் பலவீனத்தைக் காண்பிக்கிறது. வரும் நாள்கள் மிக முக்கியமானவை என இந்த சண்டைநிறுத்தம் குறித்து தெரிவித்திருக்கிறார் அமெரிக்க அதிபர் ஒபாமா. ஆம், ஒரு நாளேனும் சண்டையை நிறுத்துங்கள், சில நூறு உயிரையாவது காப்பாற்றலாம்...

## தகவல் துளிகள்...

01-கடந்த 14.08.1914 தொடக்கம் 11.11.1918 வரை 1561 நாட்களாக இடம்பெற்ற 1 வது உலகப்போரில் சுமார் 1 கோடி படைவீரர்களும் சுமார் 2 கோடி மக்களும் பலியாகியிருக்கிறார்கள்.

02-இரண்டாம் உலகமகா யுத்தத்தின்போதே முதன் முதலில் யுத்த களத்தில் விமானம் பயன்படுத்தப்பட்டது. "ரெட் பரோன்" என்னும் விமானத்தை ஜேர்மனி நாடு பயன்படுத்தியது.

# எப்போது மாறுவோம்!...

திருமதி கீதா பரமானந்தன் - ஜேர்மனி

ஒருநிமிடம் சிந்தித்துப் பார்க்கிறேன் பிள்ளைகளோடு முரண்படுகிறோம் நாங்கள் சிறந்த பண்பாடு பழக்க வழக்கத்தின் உரிமையாளர்கள் வேறு நாட்டினரோடு சேர்ந்து தவறான பழக்கங்களை பழகிவிடாதீர்கள் எந்நேரமும் கண்டிப்பும் கறாருமாய்ப் பேசும் நடக்கும் நாங்கள் சில பொது இடங்களில் நடந்து கொள்ளும் முறைகளை நினைத்தால் மனம் மிக வேதனை கொள்கிறது நாம் ஐரோப்பிய நாடுகளுக்கு வந்து முப்பது வருடம் இருபது வருடம் எனப்பெருமையோடு கூறும் நாங்கள் அவர்களிடம் இருக்கும் நல்ல பண்புகளை இன்னும் கற்றுக் கொள்ளவுமில்லை நாமாக சிந்தித்து நடப்பதுமில்லை நான் எதைப்பற்றிப் பேசுகிறேன் என என்னுகிறீர்களா?

நான் எனது பிள்ளைகளுடன் அவர்கள் பாடசாலைகளால் நடத்தப்படும் பொது நிகழ்வுகளுக்கு சென்று வரும் போதெல்லாம் இக்கேள்விகளும் இவ் வேதனையும் என்னை வாட்டும் அந்த விழாக்கள் பெரிய பொது மண்டபங்களிலேயே நடைபெறும் அந்த விழா தொடங்கும் நேரம் குறிப்பிட்டால் அந்த நேரத்திற்கு விழா மண்டபத்திற்கு வந்து உள் நுழைந்தால் இடைவேளை வரும் வரை மண்டபத்திற்குள் வேறு பேச்சுக்களோ எழுந்து வெளியே செல்வதோ கிடையாது குழந்தைகளும் இதைக்கடைபிடிக்கிறார்கள்

மேலும் அந்தக் குழந்தைகளைப் பாராட்டுவதற்காய் ஒவ்வொரு தடவையும் கை தட்டுவதை நிறுத்துவதில்லை அந்த நிகழ்வின் மதிப்பை அதை நடத்துவதற்கு எடுத்த பிரயத்தனத்தை மதிகிறார்கள் இடைவேளைக்கு வெளியே போய் மீண்டும் உள்நுழைந்தால் முடிவுவரை அமைதியாகவே இருந்து முடிந்த பின்னே வெளியேறுகிறார்கள் எங்கள் விழாக்கள் என்றால் ஆண்கள் வெளியே நின்று கதை பேசுவார்கள் அம்மாவையும் பிள்ளைகளையும் கொண்டுவந்து சேர்த்ததோடு என் வேலை முடிந்தது என்பது போன்ற நிலை என் குழந்தை முயற்சி எவ்வளவு சிரமப்பட்டுச் செய்கிறான் அவன் திறமையை நான் பார்க்க வேண்டும்

உற்சாகப் படுத்த வேண்டும் என்ற சிந்தனையே கிடையாது மற்றக் குழந்தைகளோ இன்றுதான் விளையாடுவதற்கு இடம் கிடைத்தது போல ஒரே ஆட்டம் ஓட்டம் மண்டபத்திற்குள் இருக்கும் பெண்கள் தங்களுக்குள் ஒரே பேச்சு. இள மங்கையரோ கல்வி மொழியில் இடைவிடா உரையாடல் அட என்போன்ற ஒரு இளையவரின் திறமை அவர்கள் நேரத்தை முயற்சியை பாராட்டவேண்டும் கை தட்டி உற்சாகப் படுத்த வேண்டும் என்ற எண்ணமே கிடையாது. மேடை அறிவிப்பாளர் அடிக்கடி சொல்லுவார் கை தட்டுங்கள் என்று கெஞ்சாத குறையாய் மண்டபத்திற்குள் சாப்பாடு பேச்சு இப்படி பரிதாபமாக நடக்கும் அந்த நிகழ்வு.

இன்னும் அம்மாக்களோ பிள்ளைகளை அலங்காரம் செய்கிறோம் என அலங்காரம் செய்யும் அறைக்குள்ளேயே நிற்பார்கள் மண்டபக் கதிரைகள் கைப்பைகளுடனும் அடையாளப் பொருட்களுடனும் நிறைந்து காணப்படும். மற்றவர்கள் இருக்க இடமின்றி அலைவார்கள் இன்னும் முதல் நிகழ்வு என அறிவிக்கப்பட்டு பிள்ளைகள் வந்திருப்பார்கள் பின் இன்னொருவர் வந்து நாங்கள் தூரப் போக வேண்டும் எங்களை விடுங்கள் முன்னே என தம் நிகழ்வுகளை முன்னே நிறை வேற்றுவார்கள் பின் தம் நிகழ்வு முடிந்த பின் மண்டபத்தை விட்டு வெளியேறி விடுவார்கள். பின்னர் ஆடும் பாடும் பிள்ளைகள் தன் குடும்பத்தினர் மட்டும் அல்லது ஐந்து பத்துப் பேர் இருப்பார்கள் அவர்களோடு மிக மன வேதனையுடன் தனது நிகழ்வை முடிக்கும்

இப்படிச் சத்தமும் சந்தடியுமாக நம் விழாக்கள் நிறைவடையும் இனி விழா நடை பெற்ற மண்டபங்களின் நிலைமைகளை சொல்லி முடியாது. கழிவறைகள் ஒரே தாள்களால் நிறைந்திருக்கும் குப்பை வாளி இருந்தாலும் நிலத்திலேயே குப்பைகள் போடப்பட்டிருக்கும் இது குழந்தைகளோ அல்லது பெரியவர்களோ செயலல்ல இங்கு பிறந்து வளர்ந்து பெற்றோருக்கு நாகரீகம் சொல்லும் இளம் பெண்களாலேயே செய்யப்படுகிறது. அலங்காரங்களை துடைத்து கீழே சாதரணமாகப்போடு கிறார்கள். விழா முடிந்து துப்பரவு செய்யும் ஆண்களின் நிலைமை மிக மோசமாக இருக்கும். இவ்வளவும் மிக நாகரிகமாக அலங்காரம் செய்து வரும் நம்மவர்களாலேயே நடை பெறுகிறது. இவை எல்லாம் திருந்தி நம் விழாக்களும் சிறப்பாகவும் அமைதியாகவும் ஆரம்பித்த போது இருந்த அதே சனக்கூட்டத்துடன் எல்லோரையும் கை தட்டி உற்சாகப் படுத்தி நிறைவாக முடிக்க நாம் இன்னும் முப்பது வருடங்கள் இந்த நாட்டிலே வாழ வேண்டும் போல் இருக்கிறது. கடந்த வாரம் என் மகனின் பாடசாலையில் நடைபெற்ற ஒருபிரமாண்டமான நிகழ்வில் கலந்து விட்டு வந்த பின் என் மனதில் மீண்டும் தோன்றிய வேதனையின் வெளிப் பாடே இது.

இந்த நிகழ்வில் நூற்றி நாற்பதுக்கும் மேற்படோர் இருந்தார்கள் மிகப் பெரிய செலவில் நடைபெற்றது. அதில் என் மகன் மட்டுமே வேறு நிறத்தவர். ஆனால் இங்கு எந்துப் பாரபட்சமோ மனவருத்தமோ ஏற்படாமல் மிகப் பெருமையோடு வீடு வரும் நிகழ்வாய் அமைத்தது அப்போது மீண்டும் நாம் பங்கு கொள்ளும் நம் விழாக்களை நினைத்து வேதனை கொள்ளாமல் இருக்க முடியவில்லை. காலம் மாறுமா? நாங்கள் மாறுவோமா?..



## மங்கையற்கரசி அமிர்தலிங்கம்

(03.07.1933--09.03.2016)

## அஞ்சலி



தமிழ் மக்களின் உரிமைப்போராட்ட வரலாற்றின் உயிர்த்துடிப்புள்ள பாத்திரமாக திகழ்ந்தவர் மங்கையற்கரசி அம்மையார் தமிழர் உரிமைப் போராட்ட வரலாற்றில் ஒர் உயிர்த்துடிப்பு பெண்மணியாக திகழ்ந்தவர் மங்கையற்கரசி அம்மையாராவர். எமது உரிமைப்போராட்ட வரலாற்றில் உயிர்த்துடிப்புள்ள ஓர் பெண்மணியின் இழப்பு! மங்கை அக்கா என்று தமிழ் பேசும் மக்களின் ஆழ்மன உணர்வுகள் அடிக்கடி உச்சரித்த மகத்தான அந்த பெண்மணியின் இழப்பு செய்தி எமக்கு ஆறாத துயரத்ததை தந்திருக்கிறது. தமிழ் பேசும்மக்களின் உரிமை போராட்ட வரலாறு அகிம்சையில் தொடங்கியே ஆயுதவழிமுறைக்கு மாறியது. அகிம்சை போராட்ட வரலாற்றை அன்றுவழி நடத்திய தந்தை செல்வாவோடு இணைந்தும்,தந்தை செல்வா அவர்களின் இழப்பின் பின்னர் அகிம்சை போராட்டத்தை தன் தோள் மீது சுமந்தும் தலைமையேற்று வழி நடத்தி வந்தவர் அமிர்தலிங்கம் அவர்கள். வீட்டுக்குள் அடைபட்டிருந்த பெண்களுக்கு விடுதலையின் வீர உணர்ச்சியை ஊட்டிய மகாகவி பாரதியின் கனவுகளை மெய்ப்பித்து தன் கணவர் அமரர் அமிரின் கைப்பிடித்து வேலி எல்லை தாண்டி வீதிக்கு வந்து உரிமைக்காக உரத்துக் குரல் கொடுத்தவர்

மங்கை அவர்கள் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக் கனவுகளை நெஞ்சில் கரு வளர்த்துச் சுமந்தவர். அன்றைய மேடை பேச்சுக்களில் அமிர் அவர்களுக்கு பக்க துணையாக அவர் நிமிர்ந்து நின்றவர். அகிம்சை போராட்ட களங்களில் அவரது குரல் ஓங்கி ஒலித்து வந்தது. தமிழ் மக்களின் உரிமைப்போராட்ட வரலாற்றின் உயிர்த்துடிப்புள்ள பாத்திரமாக திகழ்ந்தவர் மங்கையற்கரசி அம்மையார் அவர்கள் கடந்த 09.03.2016 அன்று லண்டனில் காலமானார். அன்னாருக்கு எமது அஞ்சலிகள்.

# என்று தணியும் இந்த கொடுமையின் மோகம்...

16-02-2016 அன்று வவுனியா மாணவி கங்காதரன் ஹரிஸ்ணவி கொடுமைப்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்ற செய்தி மீளவும் ஒருபெரும் அதிர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையால் இந்த நாடே கலங்கிப் போயிருந்தது.மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என மக்கள் திரண்டெழுந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஒரு மாணவிக்கு நடந்த கொடுமை கண்டு மக்கள் சமூகம் விழித்தெழுந்த வரலாறு வித்தியாவின் மரணத்தின் போதுதான் நம் மண்ணில் பதிவாகிக் கொண்டது எனலாம்.குற்றவாளிகளுக்கு மரண தண்டனை கொடு! என்ற கோசம் இந்த நாட்டை அதிர வைத்தது. எந்த அமைப்பும் பின்னணியில் இல்லை என்று கூறும் அளவில் பொதுமக்கள், இளைஞர்கள் தாமாகவே ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் இலங்கை முழுவதிலும் இன, மத, மொழி என்ற வேறுபாடு இன்றி முன்னெடுக்கப்பட்டது.எனினும், ஆர்ப்பாட்டத்தைக் குழப்பி இத்தகையதோர் ஆர்ப்பாட்டம் இனிமேல் யாழ்ப்பாணத்தில் நடக்கக்கூடாது எனத் திட்டமிட்ட சில தீய சக்திகள், யாழ்ப்பாண நீதிமன்றத்தின் மீது கல்வீசி தாக்குதல் நடத்தினர்.ஒரு மாணவிக்கு நடந்த அவலம் கண்டு கொதித்தெழுந்த மக்களின் உணர்வுகளை எரியூட்டி சாம் பலாக்குவதாக நீதிமன்றத் தாக்குதல் அமைந்து போனது.தாக்குதலில் சம்பந்தப்படாதவர்களும் கைதாகும் அவலம் நடந்தேறியது. நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கைதாகி விளக்கம் விசாரணை என்பதற்கு உட்பட்டபோது, மாணவி வித்தியாவுக்காக ஒலித்த குரல்களு க்கு எந்தவித பலனும் கிடைக்காமல் போகும் அளவில் நிலைமை மாறிற்று.

இதன் விளைவுதான் வவுனியாவில் மாணவி ஹரிஸ்ணவியின் படுகொலையாகும். மாணவி வித்தியாவுக்கு நடந்த கொடுமை கண்டு மக்கள் சமூகம் திரண்டெழுந்த போதிலும் குற்றவாளிகளுக்கான தண்டனை என்ன? எப்போது? என்பது தெரியாததன் காரணமாக பொதுமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம், குற்றம் செய்தவர்களுக்கு எந்த வகையிலும் பாதகமாக அமையாது என்ற செய்தியை மாபாவம் செய்யும் பாதகர்களுக்கு உறுதிப்படுத்தியது.
இஃது சட்டம், நீதி, மக்கள் சமூகம் என எவற்றுக்கும் பயம் கொள்ளத் தேவையில்லை என்ற துணிச்சலை சமூக விரோதிகளுக்குக் கொடுத்து விட மாணவி வித்தியா, ஹரிஸ்ணவி என கொலைப் பட்டியல் நீள்கிறது.

மாணவி வித்தியாவின் மரணத்தின் போது இன்று மாணவி வித்தியா? நாளை யார்? என்ற கோஷத்துடன் பதாகைகள் தாங்கிய மக்கள் பேரணி எழுச்சியுற்ற போது, மாணவி வித்தியாவின் மரணம் எங்கள் பெண் பிள்ளைகளுக்குப் பூரண பாதுகாப்பை வழங்கப்போகிறது என்று நம்பினோம்.
ஆனால் அடுத்தது யார் என்ற கேள்விக்கு மாணவி ஹரிஸ்ணவி என்பதே பதில் என்று யாரும் நினைத்திருக்கவில்லை.என்ன செய்வது? எங்களுக்கான பாதுகாப்பு எங்களின் கைகளில் இல்லை என்பதே நியதியானால்... என்று தணியும் இந்தக் கொடுமையின் மோகம் என்று முணுமுணுப்பதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்!...





# அமரர் கலாபூசணம் பீ.எம்.புன்னியாமீன்
# இலங்கை - உடத்தலவின்னை



## அமரர் கலாபூசணம் பீ.எம்.புன்னியாமீன் இலங்கை - உடத்தலவின்னை (கண்டி)

இலங்கையின் கண்டி மாவட்டத்தில் உடத்தலவின்னை என்ற பகுதியில் வாழ்ந்தாலும், உலகம் அறியக்கூடிய மனிதராக இலக்கியப்பணியும், கல்விப் பணியும் செய்தஎழுத்தாளர், கல்வியாளர் திரு.பீ.எம். புன்னியாமீன் அவர்கள் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துன்பத்தை அடைந்தோம். திரு. புன்னியாமீன் அவர்கள் சிறந்த இலக்கிய கர்த்தா. பல சிறுகதைகளையும், கட்டுரைகளையும், ஆய்வுகளையும் எழுதியுள்ளார். இவரது துணைவியாரும் இவருடன் இணைந்து பல இலக்கியப் பணிகளை ஆற்றியுள்ளார். இவர் சிந்தனை வட்டம் என்ற அமைப்பின் மூலம் பலரது எழுத்துக்களை நா லுருவாக்கம் செய்து வெளியீடு செய்துள்ளார். இவரது இழப்பு, இலக்கிய உலகிற்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.திரு. புன்னியாமீன் அவர்கள், எழுத்தாளர் சங்கத்துடன் நீண்ட காலமாக சேர்ந்து இலக்கியப் பணியினை ஆற்றியவர். எமது சங்கத்தால் வெளியீடு செய்யப்பட்ட இரண்டு நா ல்களை அச்சிட்டு உதவியவர்.அவர் எழுதிய நூறாவது நூலான இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரத்திரட்டு நான்காவது பகுதியின் புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் விபரக்கொத்து பகுதி 1 என்ற நூலினை முதலில் யேர்மனியில் எமது யேர்மன் எழுத்தாளர் சங்கத்தின் மூலம் வெளியீடு செய்தோம். இதன் மூலம் அவரது நட்பு மேலும் பலமடைந்து இலக்கியப் பயணத்தை செய்தோம். இன்று இவர் இல்லை என்பது எமக்குப் பெரும் வேதனையைத் தருகின்றது. இவரது பிரிவால் துயருறும் அனைத்து உள்ளங்களுடனும் நாமும் சேர்ந்து துயருறுகின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம்
மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை-ஜேர்மனி.

# மாபெரும் எழுத்தாளர் சாகித்யரத்னா செங்கையாழியான் மறைந்தார்!...

(லெ.முருகபூபதி-அவுஸ்திரேலியா)



செங்கை ஆழியான் என்ற புனைபெயரால் பரவலாக அறியப்படும் க. குணராசா (சனவரி 25, 1941 - 28 பெப்ரவரி 2016) மிகப்பெருமளவு நூல்களை வெளியிட்ட ஈழத்து எழத்தாளராவார். புதினங்கள், சிறுகதைகள், புவியியல் நூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் க. குணராசாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். நீலவண்ணன் என்ற பெயரிலும் ஆக்கங்கள் வரைந்தார்.

இவர் கந்தையா அன்னம்மா தம்பதிகளின் எட்டாவது குழந்தையாக வண்ணார்பண்ணையில் பிறந்தார். யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் உயர் கல்வியைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கற்றார். இவர் 28.02.2016 இல் தனது 75 வது வயதில் இயற்கையெய்தினார்

இவருடைய ஆக்கங்கள் தொடர் கதைகள் கட்டுரைகள் ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த 'கிடுகு வேலி' என்ற இவரது தொடர்கதை வாசகர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. இவர் எழுதிய 'வாடைக் காற்று' புதினம் திரைப்படமாக தயாரிக்கப்பட்டு, தரமான படைப்பு எனப் பேசப்பட்டது. இவர் எழுதிய நூல்கள்...

### புதினங்கள் மற்றும் குறும் புதினங்கள்

நந்திக்கடல்
சித்திரா பௌர்ணமி
ஆச்சி பயணம் போகிறாள்
முற்றத்து ஒற்றைப் பனை
வாடைக்காற்று
காட்டாறு
இரவின் முடிவு
ஜன்ம பூமி
கந்தவேள் கோட்டம்
கடற்கோட்டை

### சிறுவர் இலக்கியம்

சிறுவர் புதினங்கள்
பூதத்தீவுப் புதிர்கள்
ஆறுகால்மடம்

### வரலாற்று நூல்கள்


யாழ்ப்பாண அரச பரம்பரை
நல்லை நகர் நூல்
24 மணிநேரம்
மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம்

### ஆய்வு நூல்கள்

ஈழத்துச் சிறுகதை வரலாறு
தொகுப்புக்கள்
மல்லிகைச் சிறுகதைகள் - 1
மல்லிகைச் சிறுகதைகள் - 2
சுதந்திரன் சிறுகதைகள்
மறுமலர்ச்சிச் சிறுகதைகள்
ஈழகேசரிச் சிறுகதைகள்
முனியப்பதாசன் கதைகள்
ஆயிரமாயிரம் ஆண்டுகள்

## தமிழர்தம் ஆவணக்காப்பாளரை இழந்தோம்

மௌனத்தின் நாயகனாகவே நிரந்தரத் துயிலுக்குச் சென்ற செங்கைஆழியான் பூகோளச்சுற்றுச்சூழலையும் ஈழத்தமிழர்களின் வரலாற்றையும் ஆய்வுக்கண்ணோடு பதிவுசெய்த பன்னூல் ஆசிரியர் சில மாதங்களுக்கு முன்னர் செங்கை ஆழியான் பற்றிய எனது பதிவுவெளியானது. அதனை அவருக்குச் சேர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுத்தேன். திங்கட்கிழமை 29-02-2016 அதிகாலை அவுஸ்திரேலியா சிட்னியிலிருந்து தாயகம் வானொலி ஊடகவியலாளர் எழில்வேந்தன், செங்கைஆழியான் மறைவுபற்றிச் சொல்லி என்னை துயில் எழுப்பினார். கடந்த சில வருடங்களாக எதுவும் பேசாமல் எழுதாமல் மௌனத்தின் நாயகனாகவே வாழ்ந்திருக்கும் செங்கை ஆழியான் தனது பவளவிழா வயதையும் நிறைவுசெய்துகொண்டு தனது மௌனத்தை நிரந்தரத்துயிலின் ஊடாக நிரந்தரமாக்கிவிட்டுச் சென்றுவிட்டார்.



# அமரர் செங்கையாழியான் பற்றிய பதிவுகள்....

அனைவரும் சொல்வதுபோன்று (க.குணராசா) செங்கைஆழியான் மறைவு ஈடுசெய்யப்படமுடியாத இழப்பு அல்ல. ஈடுசெய்யப்படவேண்டிய பாரிய இழப்பு. அவரால் தோன்றியிருக்கும் பாரிய வெற்றிடத்தை இனியார்தான் நிரப்புவார்? செங்கைஆழியான் சிறுகதை, நாவல், விமர்சனம், இலக்கியத்தொகுப்புகள், கட்டுரைகள் என ஏராளமாக எழுதிக்குவித்தவர். அவருடைய சிறுகதைகள், நாவல்கள் சர்ச்சைகளையும் உருவாக்கியது. குறிப்பாக வாடைக்காற்று, காட்டாறு முதலான நாவல்கள்.அவரது அரச உயர்பதவிகளுக்கும் ஆப்பு வைத்திருக்கிறது.

ஆயினும் அவர் சோர்வடையாமல் தொடர்ந்து வேறு ஏதாவது ஒரு பணியில் தன்னை இணைத்துக்கொண்டு தீவிரமாக இயங்கும் இயல்புகொண்டிருந்தவர். நோய் உபாதை அவரை முடக்கியிராவிட்டால், மேலும் பல பதவிகள் அவரை நோக்கிவந்திருக்கும். தொடர்ந்தும் படைப்பு இலக்கியத்துடன் பூகோளச்சுற்றுச்சுழல், ஈழத்தமிழர் வரலாறு பற்றியும் கட்டம் கட்டமாக வளர்ந்திருக்கும் ஈழத்தமிழ் இலக்கியத்துடன் புகலிடத்தவர்களின் படைப்பு இலக்கியங்களையும் மதிப்பீடு செய்திருப்பார்.

சுருக்கமாகச்சொன்னால் அவர் ஒரு நடமாடும் நூலகம். நடமாடிய என்சைக்கிளோபீடியா. இந்தப்பதிவில் செங்கைஆழியான் எழுதிய இலக்கியப்புதினங்கள் பற்றிச்சொல்ல வரவில்லை. ஈழத்தவர் சரித்திரம், புவியியல் சார்ந்து அவர் எழுதிய பாடநூல்கள், யாழ்ப்பாண அரச பரம்பரை, விண்ணையும் மண்ணையும் பற்றி எழுதிய பல நூல்கள் என்பன தமிழ் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நிறைந்த பலனைத்தந்தவை.

அத்துடன் - பல்கலைக்கழக - ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்களுக்கும் உசாத்துணை நூல்களாக விளங்கியவை.எமது தமிழ் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவர் விட்டுச்சென்றுள்ள நூல்கள் மிகவும் பெறுமதியானவை.The Jaffna Dynasty , அபிவிருத்திப் புவியியல் , ஆரம்பப் புவியியல்: (எட்டாம் வகுப்புக்குரியது) இடவிளக்கவியற் படங்கள், இலங்கையின் புவிச்சரிதவியல் ஈழத்தவர் வரலாறு (கி.மு 500 - கி.பி 1621) ஐக்கிய அமெரிக்காவின் புவியியல் - ஐக்கிய இராச்சியம் - சுனாமி கடற்கோள் சுற்றாடற் புவியியல் - சுற்றுச் சூழலியல் - சூரியனின் கதைஞாயிற்றுத் தொகுதி - நல்லை நகர் நூல் - படவரைகலையில் எறியங்கள் - பிரபஞ்சம் - புள்ளிவிபரப் படவரைகலையியல் புவியியல் தேசப்படத் தொகுதி - புவியியல் புள்ளிவிபரவியல் பூதத்தம்பி - பூமித்தாய் - பூமியின் கதை - பௌதிகச் சூழல் நிலவுருவங்கள் - பௌதிகப் புவியியல்: (க.பொ.த உயர்தரம்) பௌதீகச்சூழல் காலநிலையியல் - பொது அறிவு - பொது உளச்சார்பு - பொருளாதாரப் புவியியல் - மகாவம்சம் தரும் இலங்கைச் சரித்திரம் - மானிடப் புவியியல் - யாழ்ப்பாண அரச பரம்பரை - யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு.மேற்குறித்த செங்கைஆழியான் நூல்களின் பட்டியலிலிருந்து அவர் எமக்காக விட்டுச்சென்றுள்ள ஆவணப்பதிவுகள் எவ்வளவு பெறுமதியானவை என்பது எம்மவருக்கு புரியலாம்.இதுவரையில் நூலுருவில் வெளிவராத செங்கைஆழியான் நூல்கள் பல இருப்பதாக அறிய அவர்களின் மறைவினால் ஏற்பட்டுவிடும் வெற்றிடத்தை நாம் எவ்வாறு நிரப்புவதற்கு முயற்சி செய்கின்றோம்? என்ற வினா எழுகிறது. வாழும்பொழுது அவர்களைப்பற்றி எழுதாமல் - மறைந்த பின்னர் எழுதித்தான் எம்மை நாம் திருப்திப்படுத்திக்கொள்ளும் மரபில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். மறைந்த பின்னர் கௌரவப்படுத்துவதும் - பட்டங்கள் சூட்டி -விருதுகள் வழங்கி சிறப்புசெய்வதையும் மறைந்தவர்களின் ஆத்மா எங்கேயிருந்தாவது பார்த்துக்கொண்டிருக்கும் என்ற நம்பிக்கையின் விளைவா அந்த நிகழ்வுகள் - நினைவரங்குகள் என்றும் யோசிக்கின்றோம்.

அஞ்சல் ஓட்டத்தில் ஒருவரிடம் பெற்றுக்கொள்ளும் கோலை மற்றவர் கையில் ஒப்படைக்கும் வரையில் அந்த அஞ்சல் ஓட்டம் தொடரும். இறுதியில் ஓடுபவர் அதனை முடித்துவைப்பார். அதில் வெற்றியும் காண்பார். அதனால் இறுதியில் ஓடி முடித்தவருக்கு மாத்திரமல்ல அந்த வெற்றியின் பெருமை. அஞ்சல் ஓட்டத்தில் ஒரு அணியில் இணைந்திருந்த அனைவரும் அந்த வெற்றிக்குரியவர்கள்தான்.

செங்கைஆழியானும் இலக்கியம், ஆய்வு, தொகுப்பு, வரலாறு, புவியியல், சுற்றுச்சூழல் முதலான பல்துறைகளில் அஞ்சல் ஓட்டம் ஓடி ஓய்ந்தவர்தான்.அவர் விட்ட இடத்திலிருந்து வேறு எவரேனும், அல்லது மேலும் பலர் தொடரவேண்டும். அதுவே அவருக்கு செய்யும் சிறந்த அஞ்சலியாகும்.அவர்களின் மறைவினால் ஏற்பட்டுவிடும் வெற்றிடத்தை நாம் எவ்வாறு நிரப்புவதற்கு முயற்சிசெய்கின்றோம்? என்ற வினா எழுகிறது. வாழும்பொழுது அவர்களைப்பற்றி எழுதாமல் - மறைந்தபின்னர் எழுதித்தான் எம்மை நாம் திருப்திப்படுத்திக்கொள்ளும் மரபில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்.பெறுமதியானவர்களினால் உருவாகும் வெற்றிடங்களில் பயனுள்ள விதை நட்டு விருட்சங்களை வளர்க்க முயற்சிப்போம்.

.....................................................................

## செங்கையாழியானும் நானும்....

அமரர் செங்கையாழியானுடன் பேசிப் பழகியவன் என்ற அடிப்படையில் எனது கருத்துக்களையும் பகிர்ந்துகொள்வதில் அவரை நினைவு கொள்கிறேன்.. அமரர் அவர்கள் செட்டிகுளம் பிரதேச காரியாதிகாரியாக (D .R .O) கடமையாற்றிவிட்டு துணுக்காய்ப் பிரதேச உதவி அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்று துணுக்காய்ப் பகுதிக்கு வருகிறார். அப்போது நான் துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமை அலுவலகத்தில் கணக்காளராகப் பதவி வகித்ததுடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஈழநாடு பத்திரிகை நிருபராகவும் கடமையாற்றிக்கொண்டிருந்தேன்.

அப்போது அலுவலக ரீதியாக அவருடன் பேசிப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. மிகவும் அமைதியான சுபாபமுடையவர். நிதானமாகப் பேசுவதிலும் திறம்படக் கடமைகளைச் செய்வதிலும் வல்லவர். அவரின் கலை இலக்கிய எழுத்துத்துறைகளைப் பற்றியும் அவருடன் அளவளாவியிருக்கிறேன். அவரின் வெளியீடுகள் அனைத்தையும் படித்து அவருடன் கருத்துப் பரிமாறியிருக்கிறேன். அவரின் திறமைகளை மெச்சிப் பாராட்டியிருக்கிறேன். விழாக்களிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் கூடிக்குதூகலித்து


உண்டு குடித்து மகிழ்ந்திருக்கிறேன். அவரின் பிள்ளைகளைக்கூட தூக்கி முத்தமிட்டு மகிழ்ந்திருக்கிறேன். ஆம் இவையாவும் சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்பாகும்.

காரியாலய விடையமாக அடிக்கடி அவரின் காரியாலயத்திற்கு நான் சென்று வருவதால் நான் ஒரு பத்திரிகை நிருபர் என அறிந்ததும் நட்பு இறுக்கமடைந்தது. அடிக்கடி என்னை தன் காரியாலயத்திற்கு அழைத்து செய்திகளையும் அறிவித்தல்களையும் ஒவ்வொன்றாக அவர் சொல்லிக்கொண்டிருக்க நான் விரைவா எழுதிமுடித்து அந்தச் செய்திகளை யாழ்ப்பாணம் செல்லும் பஸ்சில் கொடுத்துவிடுவேன். செய்திகள் அடுத்தநாள் ஈழநாடுபத்திரிகையில் வெளிவந்ததைப் பார்த்துவிட்டு எனக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு நன்றியும் வாழ்த்தையும் தெரிவிப்பார். இப்படியாக அவருக்கும் எனக்கும் இடையில் நல்ல அன்பும் நட்பும் நிலைத்திருந்த காலங்களை எண்ணி இப்பொழுது சந்தோசப்பட்டாலும் அவரின் பிரிவு என்னைக் கதிகலங்க வைத்தது என்றே சொல்வேன்.

எப்பொழுதும் புன்முறுவல் பூர்த்த அவரது இன்முகத்தை இப்பொழுது எண்ணிப்பார்க்கையில் சந்தோஷம் ஒருபுறம் கவலை மறுபுறம் அவரின் படைப்புக்களை எண்ணி வியப்படைகின்றேன். நான் பாடசாலையில் படித்த காலங்களில்கூட அவரின் வெளியீடுகளான புவியியல், புவியியல் வினாவிடை போன்ற பல புத்தகங்களைப் படித்து பரீடசையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றிருந்ததை இன்றும் நன்றியோடு நினைவு கொள்ளுகிறேன். இவை மட்டுமல்லாமல் 1990 தொடக்கம் இன்றுவரை அதாவது 26 வருடங்களாக மண் சஞ்சிகையின் வினாவிடைப் போட்டிப் பகுதிக்கு அவரின் புத்தகங்களிலிருந்தே பல விடையங்களைத் தெரிவிசெய்து புலம்பெயர் தலைமுறைக்குக் கல்விச்செல்வத்தை வழங்கிவருவதையிட்டு அந்த மாமனிதருக்கு இவ்வேளையில் நன்றிசொல்வதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

அமரர் குணராசா அவர்கள் கலை, இலக்கியம், எழுத்துப்பணிகள் மட்டுமல்லாது அரச உயர் அதிகாரியாகவும் யாழ் பல்கலைக்கழகப் பதிவாளராகவும் ஆசிரியர் கலாசாலைகளின் ஆசிரியர்களுக்கான பல்வகையான படைப்புக்களையும் படைத்து சகல துறைகளிலும் பாண்டித்துவம் பெற்ற பெரும் கல்விமானகத் திகழ்ந்திருக்கிறார். தமிழக்கும் தமிழ்மண்ணுக்கும் அவர் ஆற்றிய பணிகள் தமிழர் நெஞ்சஞ்களில் என்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. அன்னாரின் பேரிழப்பால் துன்பக்கடலில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் கலை இலக்கிய நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்!..

-ஆசிரியர்-


POPULATION DENSITY
N
LEGEND
Persons per sq.km
> 3000
750 - 1750
500 - 750
250 - 500
100 - 250
< 100
No Data
Jaffna District
Kilinochchi District
Mullaitivu District
Mannar District
Vavuniya District
Trincomalee District
Anuradhapura District
Polonnaruwa District
Puttalam District
Batticaloa District
Kurunegala District
Matale District
Ampara District
Kandy District
Nuwara Eliya District
Badulla District
Monaragala District
Ratnapura District
Kalutara District
Galle District
Hambantota District
Matara District
50
0
50
100 Miles



# பரதநாட்டிய அரங்கேற்றம்

வடமாகாணத்தில் முதன் முறையாக வவுனியா மண்ணில் ஒரே மேடையில் ஐந்து மாணவிகளின் நடன அரங்கேற்றம் கடந்த 21-02-2016 அன்று வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் தமிழ்மணி அகளங்கள் தலைமையில் நடைபெற்றது. இதன் போது ஐந்து மாணவிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் ஒரே மேடையில் இடம்பெற்றது.

வவுனியா கோவில்குளம் சிவன்கோவில் என பிரபல்யம் பெற்றுள்ள அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலின் அருளகத்தைச் சேர்ந்த சி.சுபாஜினி, செ.ரிஷிகா, ச.தனுசா, கு.பிரியதர்சினி தி.தியானு ஆகிய ஐந்து மங்கையர் பரதநாட்டிய அரங்கேற்றம் செய்திருக்கின்றார்கள்.இவர்கள் சிவன்கோவில் நுண்கலைக் கல்லூரியின் மாணவிகளாவர். அத்துடன் வவுனியா மாவட்டத்தின் புகழ்பூத்த நடன ஆசிரியை யாகிய திருமதி சூரியயாழினி வீரசிங்கத்தின் மாணவிகளுமாவர்.

சிறுவர் இல்லம் ஒன்றைச் சேர்ந்த பிள்ளைகள் வளர்ந்து மங்கைப் பருவத்தை யடைந்து, பரதநாட்டியம் கற்று, அரங்கேற்றம் கண்டிருக்கின்றார்கள் என்பது சிவன்கோவில் அருளக இல்லத்திற்கு மட்டுமல்ல. வவுனியா மாவட்டத்திற்கே பெருமை சேர்க்கும் ஒரு விடயமாகும்.இந்தப் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வில் பல விடயங்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றன.

# நூல் வெளியீட்டு விழா......

மட்டக்களப்பு குடிமகனும் ஜேர்மனியில் வசித்துவருபவருமான கவிஞர் முகில்வாணனின் இரண்டு நூல்களின் வெளியீட்டுவிழா கடந்த 27-01-2016 அன்று மட்டக்களப்பில் விமரிசையாக இடம்பெற்றது. மட்டக்களப்பு தமிழச்சங்க ஆதரவுடன் இடம்பெற்ற இந்த விழாவில் அவரால் எழுதப்பட்ட "ஆணுக்குப் பெண் அடிமையா" "வண்ண எண்ணங்கள்" ஆகிய இருநூல்களின் வெளியீட்டு விழாவில் மட்டக்களப்பு மாவட்ட பெண் நோயியல் மகப்பேற்று நிபுணர் வைத்தியகலாநிதி திரு.மா.திருக்குமாரன், உளநல புனர்வாழ்வு சிரேஸ்ட மருத்துவர் திரு ரமேஸ் ஜெயக்குமார், தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் அனுசூயா சேனாதிராஜா, கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவர் ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பெண்கள் எதிர்கொள்கின்ற சவால்கள், பெண்கள் முன்னேற்றத்திற்கு தடையாகவுள்ள காரணிகள், ஆணாதிக்க மனோபாவம் பெண்களைப் பாதிக்கின்ற முறைமை என்பவற்றை தனது நூல்களில் எடுத்துகாட்டியுள்ளார். எழுத்தாளர். இந்த விழாவில் தொழிலதிபர்கள், எழுத்தாளர்கள் வாசகர்கள் எனப் பெருந்தொகையானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இறுதியில் நூலாசிரியர் ஏற்புரை நிகழ்த்தினார். இனிமையான ஒரு கலை இலக்கிய விழாவாக இனிதே நிறைவுகண்டது....



# மாநிலத் தேர்தல் முடிவுகள்....

ஜேர்மனியில் 3 மாநிலங்களின் பாராளுமன்றத் தேர்தல்கள் கடந்த 13-03-2016 அன்று நடைபெற்றது. ஜேர்மனியில் தற்போது ஆட்சியில் இருக்கும் பிரதான ஆளும் கட்சியான C D U கட்சியும் கூட்டரசில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான S P D கட்சிகளின் வாக்கு வீதம் சரிவடைந்திருக்கின்றது. இதே வேளை புதிதாக மிக அண்மையில் உருவான புதிய கட்சியான A f D கட்சியின் வாக்கு வீதம் பலமடங்கு அதிகரித்திருக்கின்றது. அகதிகள் வரவிற்கு எதிர்ப்பு மற்றும் பொருளதார நெருக்கடிகள் தற்போதய ஆளும் அரசின் கூட்டணிக் கட்சிகளின் வாக்குவீதம் சரிவுகளுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில்கூட பல மாற்றங்கள் நிகழலாம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். நடந்து முடிந்த மாநிலத் தேர்தல்களின் முடிவுகளை இங்கே காணலாம்...

| மாநிலம் | பிரதான கட்சிகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | CDU - | SPD - | Grune - | FDP - | AfD - | Linke - | Andere |
| BadenWuerttenberg | 27.3% | 12.7% | 30.7% | 08.1% | 14.5% | 03.5% | 03.2% |
| பாராளுமன்ற இருக்கைகள் | 40 | 19 | 45 | 12 | 22 | 00 | 00 |
| Rheinlandpfalz | 31.7% | 36.3% | 05.2% | 06.1% | 12.3% | 02.9% | 05.5% |
| பாராளுமன்ற இருக்கைகள் | 35 | 40 | 05 | 07 | 14 | 00 | 00 |
| SachenAnhalt | 29.8% | 10.8% | 0.5.0% | 04.9% | 23.9% | 16.3% | 09.3% |
| பாராளுமன்ற இருக்கைகள் | 43 | 15 | 07 | 00 | 34 | 23 | 00 |

பிரதான கட்சிகளின் பெயர்கள்:-

CDU - Christlich Demokratische Union Deutschland (கிறிஸ்தவ ஜனநாயகக்கட்சி)
SPD - Sozial Demokratische Partei Deutschland (சோஸலிஷ ஜனநாயகக்கட்சி)
Grune - Bundnis 90-Die Grunen (பசுமைக்கட்சி)
FDP - Freie Demokratische Partei (சுதந்திர ஜனநாயகக்கட்சி)
AfD - Altenative fur Deutschland (மாற்றத்தை விரும்பும் கட்சி)

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரைஇத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா) - 480-00 யூரோ
02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - மட்டக்களப்பு - 480-00 யூரோ
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரி - சுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - கிளிசொச்சி - 480-00 யூரோ
04. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மன்
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - திருகோணமலை - 480-00 யூரோ
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
06. செல்வன்.ஜெய்சன்.ஜெயபாலன் - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - திருகோணமலை - 480-00 யூரோ
07. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
08. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
09. திருமதி.பிரிந்தாவனி.தனபாலசுந்தரம் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
10. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழச்செலவு - வவுனியா - 480-00 யூரோ
11. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - மட்டக்களப்பு - 240-00 யூரோ
12. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - கிளிநொச்சி - 100-00 யூரோ
13. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - வவுனியா - 200-00 யூரோ

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 01-01-2016 + 384-73

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திரு.திருமதி. யஜிந்தா. ராஜ்மோகன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி. பராசக்தி. பரமாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

04. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05. திருமதி றஞ்சனா தவராஜ் -Wadgassen + 100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரின் கல்விச்செலவு அன்பளிப்பு)

06. செல்வன் சியாந்த் எமில் சர்வானந்தன் - Bleiskastel + 200-00
(ஆதரவற்றசிறார் ஒருவரின் கல்விச்செலவு அன்பளிப்பு)

07. திருமதி பிரிந்தாவனி தனபாலசுந்தரம் - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00

08. திருமதி ரோகினி இரத்தினசிங்கம் - Duidburg + 150-00
(தந்தையாரின் ஓராணடு நினைவுஅன்பளிப்பு)

09. திரு ஐ.இரகுநாதன் (அரச மொழிபெயர்ப்பாளர்)-Mulheim +200-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

10. செல்வி அர்ச்சனா அம்பிகைபாலன் - Hamm + 20-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

11. திருமதி விவேகானந்தன் - Basel-Swiss + 200-00
(கணவனாரின் ஓராண்டு நினைவுநாள் அன்பளிப்பு)

12. திருமதி பவானி மூர்த்தி - Bern-Swiss + 50-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)


13. திருமதி கீதா பரமானந்தன் - Kevelaer + 10-00


14. செல்வி ரூபிதா சிறிஸ்கந்தராசா -Kirchheim Teck + 20-00
(பிறந்தநாள்அன்பளிப்பு)

----------

+ 1754-73

| | | |
|---|---|---|
| | | + 1754 - 73 |
| அனுப்பியது: - | | |
| 1. ஒளிரும் இல்லம் (மாற்றுத்திறனாளிகள் இல்லம்) துணுக்காய் - முல்லைத்தீவு | - 500-00 | |
| 2. வலுவிழந்தோர் புனர்வாழ்வு இல்லம் திருநெல்வேலி - யாழ்ப்பாணம் | - 500-00 | |
| 3. சிறீ சண்முகா பெண்கள் இல்லம் திருகோணமலை | - 480-00 | |
| வங்கிக்கட்டணம் 3x 35-00 | - 105-00 | |
| | ------- | |
| | - 1585-00 | |
| வங்கிவரி:- (01.01.2016 - 31.01.2016) | - 11-46 | |
| (01.02.2016 - 29.02.2016) | - 11-46 | |
| | ---------- | |
| | - 1607-92 | - 1607-92 |
| | | ---------- |
| 29-02-2016ல் மீதி கையிருப்பு | | +146-81 |


Ruth Mission
No.74, Jeyapuram North,
Kilinochchi
No: 224 13/01/2016
Received with Thanks the Sum of Rupees one Hundred fifty two thousand & five hundred & eighty one Rs only.
From Mr. V. Sivarajal
On Account of Donation
Rs: 152,581/
Director/Manager



RUTH MISSION

02/02/2016

1. திரு மாணிக்கம், மாவு கடையன் - 200 ரூபா
[illegible]
சிறு அன்பளிப்பாய் கொடுத்தனர்.

2. [illegible]
[illegible]
[illegible] 300 ரூபா

3. [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

உங்கள் உதவிகளுக்கு மிக மிக நன்றி
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

நன்றி

இப்படிக்கு
[illegible]
Sis. J. Gladys

ஒளிரும் வாழ்வு அமைப்பு - துணுக்காய்

OLIRUM VAALVU ORGANIZATION - THUNUKKAI

[illegible]

திரு. [illegible]

மண் சஞ்சிகை [illegible]

[illegible]

உதவி கோருதல்

[illegible]

[illegible] 2012 [illegible]

தேவை விபரம்

01. [illegible]

02. [illegible]

03. [illegible]

04. [illegible]

[illegible]
Olirum Vaalvu Organization
[illegible]

Secretary
Olirum Vaalvu Organization
[illegible]

**இந்து அன்பகம் சிறுவர் இல்லம்**

**හින්දු අන්පකම ළමා නිවාසය**

**Hindu Anpakam Children Home**

[illegible]

[illegible]

[illegible] (45,000/=) [illegible]

[illegible]

நன்றி

# யோகசுவாமி சைவமகளிர் இல்லம்

பிரதான வீதி, சித்தாண்டி.

பதி. : HA/4/BAT/238
DS/EP/SS/D/VSSO/21
T.P. : 065-2050420

Chenkalady
People's Bank A/c No. : 227-2-001-1-0010373
Current Account : 227-1-001-3-0000331

..../01/ 2016

திரு/திருமதி/செல்வி : ..............................

அன்புடையீர்,

## நன்றி நவிலல்

மேற்படி நிலையத்தின் சார்பாகத் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வழங்கிய உதவிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், யோகசுவாமியின் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். மேலும், இது போன்ற பல்வேறு உதவிகளை தாங்கள் தொடர்ந்தும் வழங்குவீர்களென அன்பாக வேண்டிக்கொள்கின்றோம்.

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" (வள்ளுவர்)
"என்கடன் பணி செய்து கிடப்பதே" (அப்பர்)

வழங்கப்பட்ட அன்பளிப்பு :


1. ..............................  2. ..............................

3. ..............................  4. ..............................

செயலாளர்

# நூல்கள் அறிமுகம்


## கவிதைத் தொகுப்பு




தொடர்புகளுக்கு:-


முகில்வாணன்
S.Rasappah
Karlsforster Str 38
41564 - Kaarst
Germany

## பொது அறிவுக் களஞ்சியம்



தொடர்புகளுக்கு:-

மேரி ஜெயா நடேசன்
Mary Jeya Nadesan
Stapeler Str-12
48329-Havixbeck
Germany


LANKASRI
Disciplines
Men Singles
Ladies Singles
Men's Doubles
Ladies Doubles
Mixed Doubles
BADMINTON
4th
WORLD TAMIL BADMINTON TOURNAMENT
March 26th & 27th 2016
Jakob - Frantzen Halle,
Schiefbahner strasse 10,
47877 Willich, Germany
Wtbf Tamil
info@wtbf.net
www.wtbf.net


ஒளிப்படம் : அ.ஈழம் சேகுவேரா


நீதித்துறையே!

WISSEN, KULTUR & LITERATUR
ZWEIMONATIGE AUSGABE
கல்வி, கலை, இலக்கிய சமூக
இருமாத இதழ்

1990 - 2016

# ERDE

MANN
Germany / Ausgabe 176

# கண்ணீர் அஞ்சலி



07
08
2002

16
02
2016

## செல்வி. கங்காதரன் ஹரிஸ்ணவி

(மாணவி வ/விபுலானந்தா கல்லூரி)

வருட சந்தா ஜேர்மனி 15€
ஏனைய நாடுகள் 20€